பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை 01.11.2019 | கதிர் 361

இனி இது ரகசியம் அல்ல!

குரு பெயர்ச்சிக் காலம். பல இராசிக்காரர்களுக்குப் பாதிப்பு.

கிழக்கு மாகாண ஆளுநராக விருந்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கும் காலம் கூடாது போலும்.

ஏற்கனவே இஸ்லாமிய தீவிர வாதிகளின் தாக்குதல்களை அடுத்து பலத்த சர்ச்சைக் பக்கம் 02 »

# தமிழர் தரப்பின் 13 அம்சங்களில் கணிசமானவை சஜித்தால் ஏற்பு!

## நேற்றுக் கண்டியில் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கம்

(நமது அரசியல் செய்தியாளர்)

கொழும்பு, நவம்பர் 01

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் உட்பட ஐந்து தமிழ்க் கட்சிகள் தங்களின் எதிர்பார்ப்புகளாக முன்வைத்த 13 அம்சத் திட்டத்தில் கணிசமானவை நேற்றுக் கண்டியில் வெளியிட்டு வைக்கப்பட்ட – புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் – தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளன. பக்கம் 03 »

## தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் ரணில் உரையாற்ற அனுமதி மறுப்பு

### சிரேஷ்ட உறுப்பினர்கள் போர்க்கொடி



கொழும்பு, நவ. 01

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் பிரதமரும் ஐக்கிய பக்கம் 02 »

## தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கண்டியில் மாநாயக்கதேரரிடம் கையளித்த சஜித்!



கொழும்பு, நவ. 01

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கண்டியில் மல்வத்து மாநாயக்க பக்கம் 03 »

## மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு!

### சஜித்தின் தேர்தல் அறிக்கையில் உறுதி



கொழும்பு, நவ. 01

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்றுக் காலை தனது தேர்தல் அறிக்கையை கண்டியில் வெளியிட்டார். பக்கம் 02 »

## ஹெலி விபத்திலிருந்து உயிர் தப்பினார் சஜித்!

### மொட்டு தரப்பின் சதிவேலையா?



கொழும்பு, நவ. 01

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்று முன் தினம் இரவு ஹெலி விபத்தில் இருந்து உயிர் தப்பியுள்ளார் எனவும், இது ஒரு சதி பக்கம் 02 »

## இறையாண்மையைப் பாதிக்கும் உடன்பாடுகளை அனுமதியேன்!

### மகாநாயக்க தேரரிடம் சஜித் உறுதி

கொழும்பு, நவ. 01

நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் எந்தச் சர்வதேச உடன்படிக்கையையும் அனுமதிக்கப்போவதில்லை. அனைத்து சர்வதேச உடன்படிக்கைகளும் எனது ஆட்சியில் மீளமைப்புச் செய்யப்படும். பக்கம் 02 »

## 17 கட்சிகள் சங்கமம்! புதிய கூட்டு உதயம்!!

கொழும்பு, நவ. 01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட 17 கட்சிகள் இணைந்து ‘ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டமைப்பு’ பக்கம் 03 »

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நிச்சயமாக வாக்களிக்கவேண்டும்

### நாமல் ராஜபக்ஷ எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்குகளை நிச்சயமாகப் பயன்படுத்த வேண்டும். வடக்கு – கிழக்கு தமிழ் மக்களாகிய நீங்கள் உங்களுக்குக் கிடைத்துள்ள அதி உச்சமான பக்கம் 03 »

## தேர்தலுக்கு முன்னர் சர்வதேசத்துடன் எந்த ஒப்பந்தமும் செய்யவேண்டாம்!

### மஹிந்த ராஜபக்ஷ விசேட அறிவிப்பு

கொழும்பு, நவ. 01

ஜனாதிபதி தேர்தல் நெருங்கியுள்ள ஒரு நிலையில் அதற்கு முன்னதாக எந்த நாட்டுடனும் ஒப்பந்தம் எதனையும் செய்யக் கூடாதென தெரிவித்து விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

மிலேனியம் சவால் ஒப்பந்தம் கைச்சாத்தாக அமைச்சரவையில் பக்கம் 02 »

## சஜித்துடன் கைகோர்க்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

### புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று

கொழும்பு, நவ. 01

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கத் தீர்மானித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்று அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத் பக்கம் 03 »



## பசியுடன் வாடுகின்ற மக்களால் சமஷ்டியைச் சாப்பிடமுடியாது

### பெரமுனவின் பிரசாரத்தில் ரெஜினோல்ட் குரே

யாழ்ப்பாணம், நவ. 01

பசியுடன் வாடும் மக்களால் சமஷ்டியைச் சாப்பிட முடியாது. ஆகவே அது ஒருபுறம் இருக்க மறுபுறம் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடும் புதிய அரசை அமைக்கவேண்டும். அதற்கு தமிழ் பக்கம் 02 »

## புள்ளடியிட்டதை படம் பிடித்து வெளியிட்டால் 3 ஆண்டு சிறை!

கொழும்பு, நவ. 1

தபால் மூல வாக்களிப்பின்போது வாக்குச் சீட்டில் புள்ளடியிடுவதைப் புகைப்படம் பக்கம் 03 »

## மாகாணங்களு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது தேர்தல் அறிக்கையில் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்றும், நீண்டகாலம் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விடுதலை செய்யப்படுவர் என்றும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ, புதிய ஜனாதிபதியாக பதவியேற்றதும், எல்லா இரு தரப்பு உடன்பாடுகளையும் மீளாய்வு செய்யப் போவதாகக் கூறினார்.

நவம்பர் 16ஆம் திகதிக்கு முன்னர் செய்து கொள்ளப்படும் எந்த உடன்பாட்டுக்கும் தாம் கட்டுப்படவில்லை என்றும், நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல் எனக் கருதும் எந்த உடன்பாடு குறித்தும் கவனம் செலுத்தி அதில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் அறிக்கை மகாநாயக்கர்களிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து, கண்டி குயீன்ஸ் விடுதியில், நடந்த நிகழ்வில் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது, இதில் ஐ.தே.க. தலைவர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் பங்கேற்றனர்.

எல்லாநாடுகளின் உறவுகளையும் மதிக்கின்ற வெளிவிவகாரக் கொள்கை, பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், துரித உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம் ஆகிய வாக்குறுதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு–

போதைப்பொருள், ஊழல் மற்றும் மதத் தீவிரவாதம் என்பவற்றுக்கு எதிரான போர்.

பலமான தேசத்தை உருவாக்குதல்.

தேசத்தை பாதுகாக்க ஸ்மார்ட் பாதுகாப்பு மற்றும் நவீன ஆயுதப் படை, அறிவார்ந்த புலனாய்வு வலையமைப்பு உருவாக்கம்.

மக்கள் சக்தியை ஒருங்கிணைக்கும் மக்களுக்கான அரசியலமைப்பு.

நாடாளுமன்றில் 25% பெண்களுக்கான தேசிய பட்டியல் ஒதுக்கீடு.

இலங்கை முதன்மையாக வலுவான வெளிநாட்டுக் கொள்கை.

நவீன, பாகுபாடற்ற விரைவான நீதி அமைப்பு.

நீதியும் சுதந்திரமுமான ஊடகத்துறை.

பேரழிவுகளின் போதான இடர் குறைப்பு மற்றும் மேலாண்மை.

போட்டித்தன்மை மிகு பொருளாதாரம்.

மலிவான இணைய இணைப்பு மற்றும் எளிதான கொடுப்பனவு.

பொருந்தோட்டங்களை தரம் உயர்த்துதல்.

நீதியான சமூகத்தை கட்டியமைத்தல், நவீன யுகத்திற்கேற்ற நவீன கல்வி.

பயன்தரும் சுகாதார சேவை.

35 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் மருத்துவ பரிசோதனை.

அனைவருக்கும் உறையுள், 2025ல் சொந்த வீடு கொண்ட சமூகம்.

தேசிய ஒற்றுமை மற்றும் சமத்துவம்.

இனம், மதம், வர்க்கம், பாலினம் கருத்தில் கொள்ளப்படாமல் சட்டத்தின் கீழ் சமமாக நடத்தப்படுவார்கள்.

மும்மொழிக் கொள்கை.

நல்லிணக்கம், மீள்கட்டுமாணமும்.

நீண்டகால இடம்பெயர்வினால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்குடியேற்றம், வீடுகள் மற்றும் மறுசீரமைப்பு இன்னபிற உதவிகள்.

வட, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான அலுவலகத்தை முழுமையாக ஆதரித்தல்.

நீண்டகாலம் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு விடுதலை.

தனிநபர்கள், குழுக்கள், அரசியல் கட்சிகள், நிறுவனங்களின் வரலாற்று வகிபாகம், சிந்தனை போக்கு என்பவற்றை மாணவர்கள் புரிந்து கொள்ளும் பாடத்திட்ட சீரமைப்பு.

இலங்கையின் ஆன்மீகம்.

பெண்களுக்கு 52% சம வாய்ப்பு.

மாற்றுத்திறனாளிகளை அரவணைக்கும் ஆணைக்குழு நிறுவல்.

மாற்றுத்திறனாளிகளுக்கு 3% இட ஒதுக்கீடு.

அனைத்து தோட்ட தமிழ் குடும்பங்களுக்கும் 7 பேர்ச் காணி.

அனைவருக்கும் தங்குமிடம். (ஐ)

## ஹெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேலையாக இருக்கலாம் என்றும் ஐ.தே.க. வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் வவுனியா, கிண்ணியா, தம்புள்ளை ஆகிய இடங்களில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றிவிட்டு குருநாகலில் நடந்த கூட்டத்தில் பங்கேற்கச் சென்றார்.

அவர் பயணம் செய்த ஹெலி அங்கு தரையிறங்கிக் கொண்டிருந்தபோது, அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு, இருள் சூழ்ந்தது.

இதனால் ஹெலியைத் தரையிறக்க முயன்ற விமானிகள் தடுமாற்றம் அடைந்து உடனடியாக அதனை மேல் நோக்கிச் செலுத்தினர்.

அதன் பின்னர், பலமுறை விமானிகள் ஹெலியைத் தரையிறக்க முயன்றபோதும், இருள் சூழ்ந்திருந்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டனர்.

இதனால் சஜித் பிரேமதாஸ குருநாகல் கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது. அதையடுத்து அவர் மினுவாங்கொடைக் கூட்டத்தில் பங்கேற்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில் உள்ள குருநாகல் மாநகரசபை மைதானத்திலேயே, ஐ.தே.கவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

சஜித் பிரேமதாஸ தரையிறங்க முடியாத நிலையில் திரும்பிச் சென்று கூட்டம் முடிந்தவுடன் மின்சாரம் மீண்டும் வந்ததால், இது நாசவேலையாக இருக்கலாம் என்று கூட்ட அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவின் ஹெலி தரையிறங்குவதற்கு சற்று முன்னர் இப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது என்றும், அவரது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் தரையிறங்கவேண்டிய இடத்தில் குருநாகல் மாநகரசபை மின்சாரத்தை துண்டித்துவிட்டதாகவும், அமைச்சர் அஜித் பிரேரா குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஐ.தே.க. தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளது.

## தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறைவேற்றப்பட்டுள்ளது. எதுவாகினும் நாடாளுமன்ற – மக்கள் ஒப்புதல் இல்லாமல் நடக்கக் கூடாது. தேர்தலுக்கு முன்னர் அதனை செய்யவும் முயலக் கூடாது என்றும் மஹிந்த அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தபால்மூல வாக்களிப்பு ஆரம்பம் சட்ட மீறல் முறைப்பாடு இல்லை

கொழும்பு.நவ.01

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் முதலாவது நாளான நேற்று எந்தவித பாரிய தேர்தல் சட்ட மீறல் சம்பவங்களும் பதிவாகவில்லையென தேர்தல் கண்காணிப்புக்கான 'கபே' அமைப்பு அறிவித்துள்ளது.

நேற்றைய நாள் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் தமது கண்காணிப்பாளர்களை அனுப்பி கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவ்வமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ச தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் சேவையின் போது, சில வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு அருகாமையில் சட்ட விரோதமான போஸ்டர்கள் சில ஒட்டப்பட்டிருந்தன எனவும், சில இடங்களில் சட்டவிரோதமான முறையில் பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததைய அறியமுடிந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தவிர, வேறு பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மூவாயிரம் வாக்குப்பெட்டிகள் தேர்தலுக்காகக் கொள்வனவு

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்புக்குப் பயன்படுத்தும் வகையில் புதிதாக 3 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த வாக்குப் பெட்டிகள் நீர் புகாத வண்ணம் பாதுகாப்பனவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்பொழுது கொள்வனவு செய்யப்பட்டுள்ள பெட்டிகளுக்கு 1500 ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும், பிளாஸ்டிக் வாக்குப் பெட்டியொன்றை கொள்வனவு செய்வதாயின் ஒரு பெட்டிக்கு 8500 ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்தப் பெட்டிகள் யாழ்ப்பாணம், வன்னி, அம்பாறை, குருணாகலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, புத்தளம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பயன்படுத்தவுள்ளன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுக்குள் சிக்கிய முஸ்லிம் தலைவர்களுள் அவரும் ஒருவர். ஆளுநர் பதவியையும் இழந்தார். பல நூறு கோடி ரூபா செலவில் கட்டப்படும் அவரின் மட்டக்களப்பு 'கம்பஸ்' திறப்பும் சாத்தியமற்றுப் போகும் நெருக்கடி.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து எழுந்த விசாரணைப் பேரலை என்ற சுனாமியில் சிக்கிச் சீரழியும் முஸ்லிம் தலைவர்களுள் அவரும் ஒருவர்.

இப்போது இன்னொரு நெருக்கடியிலும் அவர் சிக்கியிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

இந்த நெருக்கடிக்கு வழி சமைத்துக் கொடுத்தவர் நமது வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

ஹிஸ்புல்லாவுக்கு பலமான ஆப்பு அவர் வைத்திருக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தவராசா செய்தவை இவ்வளவுதான்:–

தமது கைக்குள் சிக்கிய ஒரு வீடியோ பதிவை ஒரு முறைப்பாடாக அவர் முன்வைத்திருக்கின்றார்.

இரண்டு இடங்களில் அவர் முறைப்பாடு செய்தார். ஒன்று – குற்றப் புலனாய்வுப் பிரிவிடம். அடுத்தது – நீதிச்சேவை ஆணைக்குழுவிடம்.

இவற்றில் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் வைத்த பத்தி தான் வசமாகப் பற்றியிருக்கின்றது.

காத்தான்குடியில் குரான் வடிவத்தில் ஒரு போக்குவரத்துச் சுற்றுவட்டம் உள்ளது. ஈச்சமரங்களும் அப்பகுதியில் நாட்டப்பட்டுள்ளன.

சில காலத்துக்கு முன்னர் அந்தக் குரான் போக்குவரத்து சுற்றுவட்டத்தை இடித்தழிப்பதோடு, ஈச்சமரங்களையும் பிடுங்கி எறிய வேண்டும் என்று கோரி சில தரப்புகளால் வழக்கு ஒன்று வைக்கப்பட்டது.

அச்சமயத்தில்தான் ஹிஸ்புல்லாவின் பேச்சு அடங்கிய வீடியோப் பதிவு ஒன்று அம்பலமாகியது. ஒரு கூட்டத்தில் ஹிஸ்புல்லா பேசுகின்றார்.

*"எங்கள் நண்பர்கள் (தமிழர்கள்) சிலர் ஈச்சமரத்தைப் பிடுங்கி எறிய வேண்டும், குரான் சுற்றுவட்டத்தை உடைக்க வேண்டும் என்றெல்லாம் கருதுகின்றனர். ஒரு ஜட்ஜை மாற்றுவது என்றால் எவ்வளவு கஷ்டம் என்பது உங்களுக்குத் தெரியும். நான் எனக்கேற்றவரை மாற்றினேன். எழுதடா ஜட்ஜ்மெண்ட் (தீர்ப்பு) என்று எழுத வைத்தேன்."* – என்ற சாரப்பட அதில் முழங்குகின்றார் ஹிஸ்புல்லா.

இது இலங்கையின் நீதித்துறையில் தவறான முறையில் ஹிஸ்புல்லா தலையிட்டுக் குற்றமிழைத்தமையை உறுதிப்படுத்தும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற சாரப்பட தவராசா செய்த முறைப்பாட்டை நீதிச்சேவை ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பியிருக்கின்றது.

நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் மாதம் கடைசியில் இந்த விவகாரத்தைப் பரிசீலனைக்கு எடுத்து, விசாரணைக்கு ஏற்றுள்ளது.

தவராசாவின் முறைப்பாட்டை சத்தியப்பிரமாண வடிவத்தில் பெற்று வழக்கு ஆவணங்களோடு அணைக்குமாறு உத்தரவிட்டுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், அடுத்து வரும் நாள்களில் இந்த வழக்கை மீண்டும் எடுக்கவிருக்கின்றது.

ஹிஸ்புல்லா இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராகக் குதித்துள்ளார். அதனால் தேர்தல் பிரசார சமயத்தில் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுக்காமல் தள்ளிப் போடக்கூடும்.

ஆனால் தேர்தல் முடிந்த பிறகு நிச்சயம் ஹிஸ்புல்லாவுக்கு சட்டச் சிக்கல் இருக்கும்.

இது அவருக்கு காலைச் சுற்றிய பாம்பு. சட்டம் என்ற பாம்பை மிக லாவகமாக அவரின் கால்களில் சுற்றி விட்டிருக்கின்றார் தவராசா. காலைச் சுற்றிய பாம்பு பெரும்பாலும் கடிக்காமல் விடாது. என்ற செய்யப் போகிறார் ஹிஸ்புல்லா? எப்படிச் சமாளிக்கப் போகின்றார்?

பொறுத்திருந்து பார்ப்போமே...!

- மின்னல் -

## இறையாண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரிடம் உறுதியளித்தார் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ.

புதிய ஜனநாயக முன்னணியில் ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையை மகாநாயக்க தேரரிடம் சஜித் பிரேமதாஸ நேற்று வியாழக்கிழமை முற்பகல் கையளித்தார்.

அதனைக் கையளித்து மகாநாயக்க தேரருடன் உரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார். (ஐ)

## தேர்தல் விஞ்ஞாபன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரையாற்ற அனுமதி மறுக்கப்பட்டமை குறித்து அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து பிரதமர் ரணில் மீது விமர்சனங்கள் இருக்கும் பின்னணியில் அவரை முக்கியமான நிகழ்வுகளுக்கு அழைப்பதன் மூலம் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படலாமென சஜித் தரப்பு கருதுவதாகத் தெரிகிறது.

சஜித் ஜனாதிபதியானால் தாமே பிரதமர் என்று ரணில் நேற்று முன் தினம் முன்னதாகத் தெரிவித்திருந்தபோதும் நேற்று முன் தினம் மாலை கருத்து வெளியிட்ட சஜித், தமது அரசின் கீழ் மோசடி ஊழல் செய்வோருக்கு இடமில்லையென்றும், பாதுகாப்பு விவகாரங்களுக்கென சரத் பொன்சேகா அமைச்சராக நியமிக்கப்படுவார் எனக் கூறியதைத் தவிர வேறு யாரின் பெயரையும் தாம் அறிவிக்கவில்லையெனவும் கூறியிருந்தார்.

இந்தப் பின்னணியில் பிரதமர் ரணிலுக்கு நேற்றைய கண்டிக் கூட்டத்தில் இடமளிக்கப்படாமை குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டு அதனை சஜித் தரப்பினரிடம் முறையிட்டுள்ளனர். (ஐ)

## பசியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் அனைவரும் மொட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து நேற்றுக் கரணவாயில் நேற்று நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

சமஷ்டி, சுயநிர்ணய உரிமை இவைகளுக்காகப் போராடும் அதே நேரத்தில் துன்பப்பட்ட மக்களை மேலே தூக்கி விடுவதற்கான வாழ்வாதார அபிவிருத்திகளைச் செய்வதும் அவசியமானது. பசியுடன் வாடும் மக்களால் சமஷ்டியைச் சாப்பிட முடியாது. அபிவிருத்திக்காகப் பாடுபடும் புதிய அரசு ஒன்று வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் அனைவரும் மொட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டியது இன்றி அமையாதது – என்றார். (ஐ)

## தமிழர் தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கையின் முன்னோக்கியபயணத்திற்குஎல்லைஇல்லை – ஒன்றாய் நாம் அதை நிரூபிப்போம்' – என்ற தலைப்பில் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

**கோரிக்கைகளும் சஜித் தரப்புப் பிரதிபலிப்பும்**

**கோரிக்கை – 1**

**கோரிக்கை:-** புதிதாக உருவாக்கப்படும் அரசமைப்பில் ஒற்றையாட்சி முறைமையை நிராகரித்து தமிழ் தேசத்தினை அங்கீகரித்து அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதனையும் தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வர்கள் என்பதனையும் அங்கீகரித்து சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

**பிரதிபலிப்பு:-** நேரடியாகப் பதில் தரப்படவில்லை. ஆனால், *"தற்போதைய நாடாளுமன்றத்தில் அரசமைப்பு சீர்திருத்த முயற்சி அனைத்து பங்குதாரர்களுடனும் முன் னெடுக்கப்பட்டு தாமதமின்றி முடிக்கப்படும்"* – என்று அறிவிக்கப்பட்டுள்ள உறுதிமொழி மூலம் மேற்படி கோரிக்கை தொடர்பில் அந்த அரசமைப்பு முயற்சியின் பிரதான பங்குதாரர்களுள் ஒரு தரப்பான தமிழ்க் கூட்டமைப்பை திருப்திப்படுத்தும் பிரதிபலிப்பு காட்டப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்லாமல், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மாகாண அதிகாரங்கள் குறித்துக் குறிப்பிடும் போது *"மாகாணங்களின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவை ஜனாதிபதிகளாகிய ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கீழ் முன்வைக்கப்பட்ட திட்டங்களைக் கருத்தில் கொண்டு முடிவு செய்யப்படும்."* – எனக் கூறப்பட்டுள்ளது.

இது, பிரேமதாஸ காலத்தின் மங்கள முனசிங்க குழுவின் அறிக்கை, சந்திரிகா காலத்தின் உத்தேச அரசமைப்பு நகல் (2000ஆம் ஆண்டு), மஹிந்த ராஜபக்ஷ காலத்தின் திஸ்ஸ விதாரண குழுவின் அறிக்கை, நிபுணர் குழுவின் பரிந்துரை, மஹிந்த ராஜபக்ஷ தீர்வுக்கான குழுக் கூட்டத்தில் ஆற்றிய உத்தேச திட்டங்கள் அடங்கிய உரை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. இந்த ஐந்து ஆவணங்களையும் அடிப்படையாக வைத்தே தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்புத் தலைமை தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அது இந்த விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ளது.

*"பிளவு படாத மற்றும் பிரிக்க முடியாத இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு நடைமுறைப் படுத்தப்படும்"* என்று கூறும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் *'ஒற்றையாட்சி முறைமை உறுதிப்படுத்தப்படும்.'* என்று எங்கும் சொல்லப்படவில்லை.

*"பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதே நேரம் அனைத்து மதங்களும் பாரபட்சமின்றி சமத்துவமாக நடத்தப்படும். அனைத்து மதங்களும் நம்பிக்கைகளும் அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சம உரிமைகளைக் கொண்டிருப்பதோடு, எதுவித பாகுபாட்டுக்கும் உட்படுத்தப்படமாட்டா"* என்றும் இந்த விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

மதத் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தப்படுவது மிக விளக்கமாக, விவரமாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியும் மாகாணங்களும் பிணக்கின்றி அதிகாரங்களைப் பிரயோகிக்கின்றமையை உறுதி செய்வதற்காக மாகாண சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இரண்டாவது சபை – செனட்சபை – ஒன்று உருவாக்கப்படும் என இந்த விஞ்ஞாபனம் கூறுகின்றது.

இதேசமயம், இரண்டு மாகாணங்களை இணைப்பதற்கு இடமளிக்கும் ஒரு வாசகமும் இந்த விஞ்ஞாபனத்தில் மிக நுட்பமாகச் செருகப்பட்டிருக்கின்றது.

*"அதிகாரப் பகிர்வு அலகுகளைப் பொறுத்தவரை, உடன்பாடுகளுக்கு ஏற்ப தேவையான மாற்றங்களைச் செய்வதன் மூலம் அதிகாரப் பகிர்வினை மிகவும் அர்த்தமுள்ளதாகவும், செலவு குறைந்தவையாகவும் மாற்றுவோம்."* – என்று குறிப்பிட்டதன் மூலம் இணைப்புக்கான சாத்தியம் நுணுக்கமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 2**

**கோரிக்கை:-** இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படு கொலை என்பவற்றுக்கு முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற சர்வதேசப் பொறி முறையிலான சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் / சர்வதேச தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

**பிரதிபலிப்பு:-** எந்தப் பிரதிபலிப்பும் இல்லை.

**கோரிக்கை – 3**

**கோரிக்கை:-** பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

**பிரதிபலிப்பு:-** தேர்தல் விஞ்ஞாபனத்தில் காட்டப்படவில்லை. ஆனால் சஜித்தின் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை நிலைப்பாட்டில் இதுவும் முக்கியமானது என கட்சியின் கடந்த தேசிய மாநாட்டிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 4**

**கோரிக்கை:-** தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

பிரதிபலிப்பு:– *"குற்றம் சுமத்தப்படாமல் விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் விடுவிக்கப்படுவர்."* – என்று விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 5**

**கோரிக்கை:-** வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வ தேசப் பொறிமுறையின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.

**பிரதிபலிப்பு:-** சர்வதேசப் பொறிமுறை குறித்து எதுவும் இல்லை. ஆனால் *"காணாமலாக்கப்பட்டோரைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சியாக காணாமலாக் கப்பட்டோர் அலுவலகத்தை முழுமையாக ஆதரிப்போம்."* – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 6**

**கோரிக்கை:-** வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் அரச படைகள் போருக்கு முன் தமிழ் மக்களின் பாவனையிலிருந்த தனியார் மற்றும் அரச காணிகளிலிருந்து வெளியேற்றப் பட்டு அக்காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன், மீள்குடியமர்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

**பிரதிபலிப்பு:** *"நிலுவையில் உள்ள நிலப்பிரச்சினைகளை ஒரு வருடத்துக்குள் தீர்த்து வைக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்போம்"* – என்று கூறப்பட்டுள்ளது.

*"பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கு அவசியமில்லாத அனைத்து நிலங்களும் அவற்றின் உரிமையாளர்களிடமோ அல்லது பொதுத்துறை அதிகாரிகளிடமோ தாமதமின்றித் திருப்பிக் கொடுக்கப்படும்."* – என்று விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டது.

**கோரிக்கை – 7, 8, 9**

**கோரிக்கை 7:-** வடக்கு – கிழக்கு மாகா ணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சிங்களமயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

**கோரிக்கை 8:-** வடக்குக்கு மகாவலி நதியை திசை திருப்புவது என்ற போர்வை யில் வடக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு மாத்திரமே திட்ட மிட்டுச் செயற்படும் சபையாக மகாவலி அதிகார சபை இயங்குவதால் மகாவலி அதிகார சபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். அத்துடன், கிழக்கில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

**கோரிக்கை 9:-** அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஸ்கந்த நீர் பாசனத் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற் றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

**பிரதிபலிப்பு:-** *"குடிப்பரம்பல் மாற்றங்கள் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படமாட்டா என்ற கொள்கை தொடர்ந்து பேணப் படும்."* – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 10**

**கோரிக்கை:-** தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஉயிரினங்கள் திணைக்களம் உள்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில, வழிபாட்டுத் ஸ்தல ஆக்கிரமிப்புகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசிதழ் பிரகடனங்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

**பிரதிபலிப்பு:-** "மகாவலி மற்றும் வன மற்றும் விலங்கு, வேறு பொருத்தமான திணைக்களங்கள் போன்றவை போரின் முன்னர் மக்களுக்கும் சொந்தமாக இருந்த காணிகளை மக்கள் மீளக்குடியேறுவதற்கு என விடுவிக்கும்." – என்று விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை – 11**

**கோரிக்கை:-** போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்துவதை நோக்காகக்கொண்டு வெளிநாடுகளில் வாழ் இலங்கையர்களிடமிருந்து நேரடி முதலீடுகளை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் நிதிகளையும் கையாள்வதில் இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.

**பிரதிபலிப்பு:-** *"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக இரண்டு ஜனாதிபதி பணிக் குழுக்கள் நியமிக்கப்படும்."* – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களின் முதலீடுகளையும் சேவைகளையும் இலங்கையில் ஊக்குவிப்பது குறித்து ஒரு தனியான அத்தியாயம் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ளது.

**கோரிக்கை – 12**

**கோரிக்கை:-** வடக்கு – கிழக்குக்கான அரச மற்றும் தனியார் துறைகளின் வேலைவாய்ப்புக்களில் அந்தந்த மாகாணத்தைச் சார்ந்த மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும்.

**பிரதிபலிப்பு:-** இது தொடர்பில் வடக்கு, கிழக்குக்கென தனியான ஏற்பாடு எதுவும் விஞ்ஞாபனத் தில் இல்லை.

**கோரிக்கை – 13**

**கோரிக்கை:-** வடக்கு – கிழக்கைப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி அதன் அபிவிருத்திக்கான நிதியினைக் கையாள்வதற்கு வடக்கு – கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

**பிரதிபலிப்பு:-** *"வடக்கு, கிழக்குக்கென என இரண்டு ஜனாதிபதி பணிக்குழுக்கள் தனித்தனியாக நியமிக்கப்படும்."* – என்றே கூறப்பட்டுள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரரைச் சந்தித்து அவரிடம் கையளித்து ஆசிபெற்றார். அதன் பின்னரே அவர் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். (ஐ)

## 17 கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும் பெயரில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று முற்பகல் 10.20 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரியில் வைத்து கைச் சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட மேலும் சில பிரமுகர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

கூட்டணியில் ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. நிறைவேற்றுக்குழு, தெரிவுக்குழு ஆகியவற்றில் அந்தக் கட்சி உறுப்பினர்களே 51 சதவீதம் பங்கேற்கவுள்ளனர் என தெரியவருகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், முஸ்லிம் உலமா கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய உட்பட மேலும் சில கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. (ஐ)

## புள்ளடியிட்டதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிடும் அரச அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்பொழுது தபால் மூல வாக்களிப்பு இடம்பெறுகின்றது. இந்த வாக்களிப்பைப் புகைப்படம் எடுத்து பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் தரவேற்றம் செய்வது முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படும் ஊழியர்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குற்றமிழைத்தவராகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் 3 வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்படும். இதற்கு உதவிஒத்தாசைவழங்குவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார். (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக உரிமைகளை சரியாகப் பயன்படுத்தி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முழு உரித்துடையவர்கள் என்பதை உங்களிடம் விநயமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

சில தீய சக்திகள் பல்வேறு திரிபுபட்ட கருத்துக்களை கூறி, உங்களைக் குழப்பி, தமிழர்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளமையை எம்மால் உணர முடிகிறது.

அவர்களின் அந்தத் திட்டத்தை முறியடிக்கும் வகையில் உங்கள் வாக்களிப்பு அமைய வேண்டும். தமிழர்களிடம் உள்ள பலம் வாக்குப் பலமாகும். தமிழர்களாகிய நீங்கள் வாக்களித்து, உங்கள் பலத்தினை நிரூபித்து, அதன் ஊடாக உங்கள் தேவைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றக் கூடிய பாரதீனப்படுத்த முடியாத ஜனநாயக உரித்துடையவர்கள்.

நீங்கள் தேர்தல்களில் எவ்வளவு ஈடுபாடு உடையவர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. உங்கள் பகுதிக்கு வரும்போதும், நான் காணும் சிலரிடம் கதைக்கும் போதும், யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை விட, ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதில் நீங்கள் மிக உறுதியுடன் உள்ளமையை நான் அறிவேன். அப்படிப்பட்ட உங்களைச் சிலர் பிழையாக வழிநடத்த முயற்சிக்கின்றமை எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது.

அது மட்டுமல்லாது, இலங்கையின் தேர்தல்களில் நீங்கள் ஈடுபாடற்றவர்கள் என்பதைச் சர்வதேச நாடுகளுக்கு காட்டி, உங்கள் மட்டில் வெளிநாடுகள் வைத்துள்ள நன்மதிப்பை குறைக்க வேண்டும் என்பதிலும் சிலர் ஈடுபாடு உள்ளனர். அவர்களை இனம் கண்டு உறுதியுடன் நீங்கள் வாக்களிப்பது காலத்தின் கட்டாயம்.

இன்று நீங்கள் இவ்வளவு சுதந்திரத்துடன் நடமாடுவதற்கு காரணம் யார் என்பது உங்களுக்குத் தெரியும். 2009 ஆம் ஆண்டு இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ எடுத்த திடமான முடிவின் பலனாகவே இன்று முழு இலங்கையும் அமைதிக் காற்றைச் சுவாசிக்கின்றது.

அதேவேளை, தமிழ் மக்களாகிய உங்களுக்கு இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பது குறித்து முடிவெடுக்க வேண்டிய தார்மீக உரிமை உண்டு. நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும், உங்கள் தீர்ப்பை தாழ்மையோடு ஏற்றுக் கொண்டு, பிறக்கும் எமது புதிய ஆட்சியில் உங்களுக்கான சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர்கள் நீங்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துவோம் – என்றுள்ளது. (ஐ-07)

## சஜித்துடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் கைச்சாத்திடவுள்ளார்.

இன்று காலை 8.30 மணிக்கு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளது. அதேபோல இதர கட்சிகளுடனும் ஒப்பந்தமொன்று செய்யப்படும் .

இன்று முதல் சஜித் பிரேமதாஸ கலந்துகொள்ளும் முக்கியமான கூட்டங்களிலும் சந்திரிகா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## புதிய ஜனாதிபதிக்கு அதிகார வறுமை

ஜனாதிபதித் தேர்தலில் நேரடி மோதலில் இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்குத் தாம் போட்டியிடும் பதவியின் அதிகார நிலைமை, தாரதம்மியம் தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் தெரிந்திருக்கவில்லையோ என்று சந்தேகிக்கின்றோம்.

இந்த வேட்பாளர்கள் வெளியிடும் கருத்துகள் அத்தகைய சந்தேகத்தைத்தான் தந்து நிற்கின்றன.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குக் கட்டுமட்டில்லா அதிகாரம் இருந்த காலம், இப்போது மலையேறிவிட்டது.

அரசமைப்பிற்குக் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத்தின் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் பல வெட்டப்பட்டு விட்டன. அதுவும் இனி நடக்கப் போகின்ற தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டு விட்டன. அதனைப் புரியாமல் பேசுகின்றார் போலும் சஜித் பிரேமதாஸ.

அவர், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்காமல் வேறு ஒருவரை நியமிப்பார் என எதிர்க்கட்சிகள் ஒரு கயிறை அவிழ்துவிட, ஒரு சர்ச்சை ஆரம்பமானது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வென்ற பின்னரும் தாமே பிரதமர் என்று இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களைக் கூட்டி அறிவிக்க, அதற்குப் பதிலடி தரும் வகையில் கருத்து முன்வைத்திருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

"நான் எனது அமைச்சரவையில் பாதுகாப்பு விடயங்களை சரத் பொன்சேகாவிடம் ஒப்படைப்பேன் என்று மட்டுமே அறிவித்துள்ளேன். மற்றைய அமைச்சர்கள் யாரையும் நான் அறிவிக்கவில்லை. குறிப்பாக ஊழல்வாதிகளுக்கு எனது அமைச்சரவையில் இடம் கிடையாது." - என்றார் சஜித் பிரேமதாஸ.

சஜித்தின் இந்த அறிவிப்பு, இனித் தெரிவாகப் போகும் ஜனாதிபதியின் அதிகார நிலைமைகள் குறித்து அவர் தெளிவாக அறிந்திருக்கவில்லை என்ற மனப்பதிவையே நமக்குத் தந்து நிற்கின்றது.

இதுவரை காலமும் ஒரு ஜனாதிபதி தமது ஒரு பதவிக் காலத்தை முடித்து, அடுத்த பதவிக் காலத்தை புதிதாகச் சத்தியப் பிரமாணம் செய்து ஆரம்பிக்கும் போது -

அல்லது ஒரு ஜனாதிபதி தமது பதவியை இழந்து வெளியேற, புதிய ஜனாதிபதி பதவி ஏற்கும்போது -

அதுவரை இருந்த பிரதமரும் அமைச்சரவையும் செயல் இழக்க புதிய பிரதமரையும் அமைச்சரவையும் புதிய ஜனாதிபதி நியமிப்பார்.

இதுதான் இதுவரை இருந்த சட்ட முறைமை. ஆனால் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்த ஏற்பாட்டை எல்லாம் தின்று தீர்த்துவிட்டது.

ஜனாதிபதி மாறினாலும், இருக்கும் பிரதமரும், அமைச்சரவையும் தொடரும்.

அதன்படி பார்த்தால் நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸா, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய இரண்டு பேரில் யார் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றாலும், பிரதமர் ரணிலும் அவரது அமைச்சரவையினரும் பதவியில் தொடர்வர்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் முதல் நான்கரை ஆண்டுகள் அடுத்த பெப்ரவரியில் முடிவடையும் வரை, புதிய ஜனாதிபதியினால் கூட இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்பதால் பிரதமர் ரணிலின் அரசு அதுவரைத் தாக்குப்பிடிக்கும்.

ஒரு பிரதமர் பதவி இழப்பதற்கான வழிமுறைகள் 19ஆவது திருத்தத்தில் தெளிவாக உள்ளன. 2018 ஒக்டோபர் - டிசெம்பர் அரசியல் சதிப்புரட்சியை ஒட்டிய வழக்கில் அதனை உயர்நீதிமன்றம் உறுதி செய்தும் உள்ளது.

அதன்படி, ஒரு பிரதமர் உயிரிழந்தால் அல்லது தாமாகப் பதவியை இராஜினமா செய்தால் அல்லது எம்.பி. பதவியை இழந்தால் அல்லது நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அவ ரும் அவரது அமைச்சரவையும் தோற்கடிக்கப்பட்டாலன்றி பதவியில் தொடரவேண்டும் என்பதே சட்ட ஏற்பாடு.

இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸாவோ, கோட்டபாயவோ யார் வென்றாலும், அதற்கு பின்னர் நாடாளுமன்றத்தில் குதிரையோட்டப் பேரங்களுக்கு வழி செய்து, நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பிரதமர் ரணிலை இழக்கச் செய்யாதவரை ரணில் பிரதமராகத் தொடர்வதை இப்போதைக்கு மறுக்கவோ, மறிக்கவோ முடியாது என்பது திண்ணம்.

அது மாத்திரமல்ல, 19 ஆவது திருத்தத்தின்படி இனி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் ஓர் அமைச்சைக் கூட - அமைச்சர் பதவியைக் கூட - தன்வசம் வைத்திருக்க முடியாது. பாதுகாப்பு அமைச்சைக் கூட அவர் வைத்திருக்க இயலாது.

இந்தத் தேர்தலின் பின்னர் புதிய ஜனாதிபதி பதவியேற்கும் போது ஏற்கனவே இருக்கும் பிரதமரும், அமைச்சரவையும் அப்படியே தொடர்வது சட்ட ரீதியாக உறுதியானது.

அதுவரை இருந்த ஜனாதிபதி வைத்திருந்த பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சு போன்றவை கூட வேறு அமைச்சர் ஒருவரிடம் தான் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதைத் தீர்மானிப்பதில் கூட பிரதமரின் ஆலோசனைப்படி தான் புதிய ஜனாதிபதி நடக்கவேண்டும்.

இந்த சட்ட யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு அதற்கமைய புதிய ஜனாதிபதி செயற்பட மறுப்பாராயின் மீண்டும் உயர்நீதிமன்றத்தை நாட வேண்டி நேரும்.

2018 அரசியல் சதிப் புரட்சியை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சட்ட வரம்பு மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து, அவருக்கு சட்ட ரீதியாக குட்டு வைத்தமை போன்ற நிலைமையை புதிய ஜனாதிபதியும் எதிர்கொள்ள நேரிடும்.

# மிக நெருக்கடியான சூழ்நிலை காரணமாகவே விரும்பியோருக்கு வாக்களிக்கக் கோரினோம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. விளக்கம்



வவுனியா, நவ. 01

தபால் மூல வாக்களிப்பில் மக்கள் விரும்பியவர்களுக்கே வாக்களிக்கலாமென 5 தமிழ்க் கட்சிகள் கூட்டாக எடுத்த முடிவு மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலேயே எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐந்து கட்சிகளின் இணக்கப்பாட்டில் உருவாக்கப்பட்ட கோரிக்கைகளைப் பிரதான வேட்பாளர்கள் நிராகரித்த நிலையில், அதற்கு ஒரு இனவாதச் சாயம் பூசப்பட்டிருக்கிறது.

தெற்கின் பிரதான வேட்பாளர்கள் இறுதிக் கட்டப் போரை யார் வெற்றி கொண்டது என்ற போக்கிலேயே சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரைகளை மேற்கொண்டு வாக்குகளை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

எனவே இந்த விடயமானது தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் சவாலான விடயமாக இருக்கிறது.

ஐந்து கட்சிகளினால் தயாரிக்கப்பட்ட கோரிக்கைகளை இரு வாரங்களுக்கு முன்னரே பிராதன வேட்பாளர்களிடம் முன்வைத்து அவர்களுடன் கலந்துரையாடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் அந்த வேட்பாளர்கள் எம்மைச் சந்திக்கவும் தயாரில்லை. எமது கோரிக்கைகளை பரிசீலிக்கவும் தயாரில்லாத ஒரு நிலைமையே இருக்கிறது.

எனவே இவர்களுக்காக நாங்கள் காத்திருக்க முடியாது. அதனடிப்படையிலேயே இன்று தபால் மூலம் வாக்களிக்கும் மக்களுக்கு ஒரு செய்தியைக் கூறவேண்டியிருந்தது. அந்த முடிவு ஒரு நெருக்கடியான சூழ்நிலையிலேயே ஐந்து கட்சிகளினாலும் எடுக்கப்பட்டது - என்றார். (ஐ)

# 70 வருட காலப் பிரச்சினைகளை சுயாதீனமாகத் தீர்த்து வைப்பேன்

## கூறுகின்றார் மகேஷ் சேனநாயக்க

கிளிநொச்சி, நவ. 01

நாட்டில் 70 வருட காலமாகப் பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதனைக் கட்சியாக அல்ல சுயாதீனமாக நான் செய்யவுள்ளேன் என ஜனாதிபதி வேட்பாளர் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்தேன். நல்லூர் கோவிலுக்கும் சென்றேன். மக்களின் பல பிரச்சினைகளை அறிந்த கொண்டேன்.

இந்த நாட்டில் 70 வருட காலமாகப் பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் எனப் பல்வேறு வேற்றுமைகள் இன்றும் நீக்கப்படவில்லை.

இந்த நாடு முழுவதும் யுத்தம் இல்லாது ஒருமைப்பாட்டுடன் இருக்கும் வகையில் இயலுமானவரை முயற்சிக்கவுள்ளேன். இவ்வாறான முரண்பாடுகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

யுத்தம் எப்படி உருவானது? ஏன் உருவானது? சமாதானம் உருவானதன் பின்னர் பாதைகள் சீர்செய்யப்பட்டதைவிட வேறு எதுவும் நடைபெறவில்லை. அதனால் மக்கள் நிம்மதியாகவோ, சந்தோசமாகவோ இருக்கின்றார்களா? இல்லை. மக்களின் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை. இவ்வாறான பல பிரச்சினைகள் தீர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# வாக்களிப்பு மையங்களுக்குள் படங்கள் எடுப்பதற்குத் தடை!

கொழும்பு, நவ. 01

ஜனாதிபதித் தேர்தலின்போது, வாக்களிப்பு மையங்களுக்குள் ஒளிப்படங்கள் அல்லது காணொலிப் படங்களைப் பிடிக்கக்கூடாது என்று பொலிஸ் மற்றும் முப்படையினரையும் தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

அத்துடன் எந்தவொரு வேட்பாளருக்கு ஆதரவாகவும், பகிரங்கமாகக் கருத்து தெரிவிப்பதைத் தவிர்க்குமாறும் இவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மூத்த தேர்தல் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் நாளில் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் தேர்தல் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

அதேவேளை, வாக்களிப்பு மையத்தில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுக்கு உட்பட்ட பகுதியில் கூட்டமாகக் கூடுவது குற்றமாக கருதப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். (ஐ)




**நாளை**
02.11.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: மூலம் பி.இ 2.23 வரை
திதி : பஞ்சமி பி.இ 5.06 வரை
இராகுகாலம் : 10.33 - 12.03
சுப நேரம் : 6.03 - 7.33

# கோட்டா ஆட்சிப் பீடம் ஏறினால் மிலேனியம் உடன்பாடு மீளாய்வு

## கெஹலிய ரம்புக்வெல அதிரடி அறிவிப்பு

கொழும்பு, நவ. 01

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால், அமைச்சரவையினால் நேற்று முன்தினம் அனுமதி அளிக்கப்பட்ட 48 கோடி டொலர் மிலேனியம் சவால் கொடை உடன்பாடு உள்ளிட்ட அனைத்து இரு தரப்பு உடன்பாடுகளையும் மீளாய்வு செய்வார் என்று அவரது பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வியத்மக அமைப்பின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடந்த ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதித் தேர்தல்களுக்கு முன்னதாக மிலேனியம் சவால் உடன்பாட்டுக்கு அரசு ஏன் அமைச்சரவை ஒப்புதல் கோரியது என்பது குறித்து பலத்த கரிசனைகள் எழுந்துள்ளன.

மிலேனியம் சவால் கொடையின் கீழ் மேற்கொள்ளப் படவுள்ள திட்டங்கள் குறித்து அரசு வெளிப்படையான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை.

இந்தக் கொடையின் வெளிப்படைத்தன்மை மற்றும், இது நாட்டின் இறையாண்மையை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து கவலைகளை எழுப்புகிறது.

உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு முன்னர், அதன் விவரங்களை வெளியிடத் தவறியுள்ள அரசு, பொதுமக்களை இருளில் வைத்திருக்கின்றது.

இரு தரப்பு உடன்பாடுகளின் விவரங்களை வெளியிட அரசு தயங்குவதானது, அதன் வெளிப்படைத் தன்மை குறித்த சந்தேகங்களுக்கு வழிவகுக்கும்.

எமது அரசு பதவிக்கு வந்தால் இத்தகைய உடன்பாடுகளில் கையெழுத்திடுவதற்கு முன்னர் அனைத்து உடன்பாடுகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வெளிப்படையான நடைமுறைகள் பின்பற்றப்படும்.



இந்த உடன்பாடுகள் அனைத்தையும் நாங்கள் மிகவும் கவனமாக ஆராயவேண்டும். குறிப்பாக இந்த உடன்பாடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாங்கள் பொதுமக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். அப்போது தான் அவர்களுக்கு விவரங்களை வெளிப்படுத்த முடியும்.

மிலேனியம் சவால் உடன்பாட்டின் கீழ் உள்ள அனைத்து உடன்பாடுகளையும், ஆராய்வதற்குச் சட்டமா அதிபரிடம் பரிந்துரைக்கவேண்டும். அரசு அவ்வாறு செய்யத் தவறிவிட்டது.

இந்த உடன்பாட்டை விரைவாகக் கையெழுத்திடுவதில் அரசு முனைப்புக் காட்டியதானது, அரசின் நோக்கங்களைப் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

தற்போதைய அரசு கைச்சாத்திட்டுள்ள பல இரு தரப்பு உடன்பாடுகள் ஒரு தலைப்பட்சமானவையாகும்.

குறிப்பாக, சிங்கப்பூருடனான சுதந்திர வணிக உடன்பாடு முற்றிலும், ஒரு தலைப்பட்சமானது.

நாங்கள் ஆட்சிமைக்கும் போது அவற்றை மீளாய்வு செய்யுமாறு அவர்களிடம் கோரலாம். அதைச் செய்ய எங்களுக்கு உரிமை உள்ளது.

ஏனெனில் இந்த உடன்பாடுகளில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறித்து பொது மக்கள் அறிந்திருக்கவில்லை.

இந்த அனைத்துச் செயல்களுக்கும் பின்னால் ஒரு மோசமான நடவடிக்கை உள்ளது.

இவை அனைத்தும் மோசமான உடன்பாடுகள் என்று நாங்கள் கூறவில்லை. எனினும் எல்லாம், இரு தரப்பு நலன்களை உறுதிப்படுத்துபவையாக இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

எந்தவொரு உடன்பாடும் பரஸ்பர நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். ஒருதலைப்பட்சமானதாக இருக்க முடியாது – என்றார். (ஐ)

# சிறுபான்மையினர் 3ஆம் தரப்புக்கு வாக்களிப்பது தவறான செயலாகும்

## கிண்ணியாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

திருகோணமலை, நவ. 01

பிரதான கட்சிகள் மீதான விரக்தியில் மூன்றாம் தரப்புக்கு வாக்களிப்பது பற்றி சிறுபான்மைச் சமூகம் சிந்திக்க முடியாது. இதன்மூலம் வாக்குகள் வீணடிக்கப்படுவதுடன், எதிரணி வேட்பாளர் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். சிறுபான்மைச் சமூகம் இவ்வாறானதொரு தவறைச் செய்யமுடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் திருகோணமலை, கிண்ணியாவில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏப்ரல் பயங்கரவாத தாக்குதலின் பின்னர் அச்சுறுத்தல்கள், பாதுகாப்பற்ற சூழல், அவதூறு குற்றச்சாட்டுகள், முஸ்லிம் தலைமைகளுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகள் என நாலாபுறங்களிலும் பலவிதமான நெருக்கடிகளை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியது.

இத்தகைய இக்கட்டான சூழலுக்கு எமது சமூகத்தை ஆளாக்கிய தரப்பை வெற்றி பெறச் செய்வதற்கு நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா என்று சிந்தியுங்கள். இந்த ஜனாதிபதி தேர்தலானது முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் சவாலான தேர்தல் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

குருநாகல் வைத்தியர் ஷாபிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட போலிக் குற்றச்சாட்டுகளினால் பின்னணியிலிருந்த கும்பல்கள் இப்போது எந்த தரப்பில் சங்கமித்திருக்கின்றன என்று பாருங்கள். இந்த சூழலில் எங்கள் மத்தியில் வேறொரு தெரிவு இருக்கமுடியாது. ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நாங்கள் அனைவரும் ஒருமித்து தெரிவுசெய்த புதிய யுகத்தின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கிறோம்.

1988ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியான பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தற்போது சஜித் பிரேமதாஸ களமிறங்கியிருக்கிறார். நாங்கள் இவரை வேட்பாளராகப் பெயரிட்டமை குறித்து சிறுபான்மைக் கட்சிகள் என்றவகையில் பெருமை கொள்கிறோம்.



கடந்த அரசு தொட்டு இன்றுவரை சிறுபான்மைச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்வதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசில் உத்தரவாதமளிக்கலாம் என்ற திடமான நம்பிக்கையில்தான் நாங்கள் அவருடன் இந்தப் பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

பிரதான கட்சிகள் மீதான விரக்தியின் அடிப்படையில் சிலர் மாற்றுக்கட்சிக்கு வாக்களிப்பது பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். பிரதான வேட்பாளர்களில் ஒருவர் 50% வாக்குகளைப் பெறாவிடின், மூன்றாவது வேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்குகள் வீணாகிவிடும். சிறுபான்மைச் சமூகம் இவ்வாறானதொரு தவறை செய்யமுடியாது.

எமது விரக்தியை காட்டுவதற்காக மூன்றாவது வேட்பாளருக்கு வாக்களிப்பது தேர்தல் உத்தியல்ல. இத்தகைய செய்கையினால் தப்பித்தவறியாவது மாற்றுத் தரப்பு வென்றுவிட்டால், நாங்கள் இந்த மண்ணில் அடிமைகளாக வாழ்வதற்குத் தயாரா என்பது குறித்து சிந்தித்துக்கொள்ளுங்கள்– என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மண்கும்பான், அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், மண்கும்பான் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

புதுக்குடியிருப்பு ஒரு பகுதி, Hydramani ஆடைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

மூன்று முறிப்பிலிருந்து புழயா வரை, அழகல்ல, கல குண்டமடு, புபுதுகம, ஈரப்பெரியகுளம் மூன்று முறிப்பு இராணுவமுகாம் , வவுனியா இராணுவ முகாம், வவுனியா விமானப்படை இணைந்த பராமரிப்பு நிலையம், வவுனியா விமானப்படைரேடர், மன்றொன் ஆடைத் தொழிற்சாலை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம் , SLBC ஈரப்பெரியகுளம் Rebco North, மடுகந்தவிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் –

**நாளை சனிக்கிழமை -**

**யாழ் பிரதேசத்தில் -**

கரம்பன், மெலிஞ்சிமுனை, மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப்பீடம், அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, கல்வயல், மட்டுவில், வாகையடி, கைதடி நுணாவில், கைதடி சந்தி, கைதடி கோப்பாய் வீதி, கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, நவபுரம் , கள்ளிநகர், நாவற்குழி சந்தி, நாவற்குழி கேரதீவு வீதி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, கோகிலாக்கண்டி, தனங்கிளப்பு, அறுகுவெளி, Sanken construction கைதடி யுனைரட் மோட்டர்ஸ், கைதடி நுணாவில் நாராயணா ஹாட்வெயார், வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, யாழ் கோட்டை, சுகாதார திணைக்களம், மீனாட்சிஅம்மன் கோவிலடி, யாழ் சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ் துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

ஈரப்பெரியகுளம், இறம்பைக்குளம், ராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, S.V.R அரிசி ஆலை, சூசைப்பிள்ளையார் குளம், பார் வீதி, மில் வீதி, ஓவியா ஹோட்டல், கந்தசாமி கோவில் வீதி, 1ஆம் குறுக்குத் தெரு, 2ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் -**

சிலாவத்துறை சந்தியிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், சிலாவத்துறை கடற்படைமுகாம ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# ஓடும் பஸ்ஸில் கூட்டுப் பலாத்காரம் புரிந்த 4 பேருக்கும் விரைவில் தூக்குத் தண்டனை







புதுடெல்லி,நவ.01

டெல்லி மருத்துவ மாணவி நிர்பயா கூட்டுப்பலாத்காரம்செய்துகொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள 4 பேருக்கும் விரைவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படலாம்எனத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட 4 பேரும், அடுத்த 7 நாள்களுக்குள் கருணை மனுவைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி அங்கிருந்து பதில் பெறாத பட்சத்தில் அவர்களுக்கான தண்டனை நிறைவேற்றப்படும் என்று திஹார்சிறைஅதிகாரிகள்தெரிவித்தனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு, 23வயதான மருத்துவக் கல்லூரி மாணவி ஓடும் பஸ்ஸில் கூட்டுப்பலாத்காரம் செய்யப்பட்டு, பஸ்ஸிலிருந்து கீழே வீசப்பட்டார். அவரின் நண்பரும் கடுமையாகத் தாக்கப்பட்டார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட அந்த மாணவி சிங்கப்பூருக்கு மருத்துவச் சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டு பலன் அளிக்காமல் 2012, டிசம்பர் 29 ஆம் திகதி உயிரிழந்தார்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த மருத்துவ மாணவியின் பெயர் வெளியிடப்படவில்லை, அவரை நிர்பயா என்றே மக்கள் அழைத்தனர்.

டெல்லி பொலிஸார் கொலை மற்றும் கற்பழிப்பு வழக்குப் பதிவு செய்து ராம்சிங், முகேஷ் சிங், வினய் சர்மா, பவன் குப்தா, அக்ஷய் தாக்குர் மற்றும் ஓர் இளம் குற்றவாளி என 6 பேரைக் கைது செய்தனர்.

இவர்களில் ராம்சிங், திஹார் சிறையில் 2013 சம் ஆண்டு, மார்ச் மாதம் 11ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

'நிர்பயா' வழக்கை விசாரித்த விரைவு விசாரணை நீதிமன்றம் இளம் குற்றவாளிக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தும் முகேஷ் சிங், வினய் சர்மா, பவன் குப்தா, அக்சய் தாக்குர் ஆகிய 4 பேருக்கு மரண தண்டனை விதித்தும் 2013 ஆம் ஆண்டு செப்டம்பரில் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்பை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தன.

ஆனால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 குற்றவாளிகளுக்கும் இன்னும் தண்டனை நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இதில் 3 குற்றவாளிகள் திஹார் சிறையிலும், ஒருவர் மண்டோலி சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் 7 நாள்களுக்குள் 4 குற்றவாளிகளும் குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அளித்து அதற்குப் பதில் வராவிட்டால் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என திஹார் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்துதிஹார்சிறை இயக்குநர் சந்தீப் கோயல் நிருபர்களிடம் கூறுகையில், நிர்பயா வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 குற்றவாளிகளும் இன்னும் 7 நாள்களுக்குள் குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அளிக்க வேண்டும். இதுவரை குற்றவாளிகள் 4 பேரும் தண்டனையை மறு ஆய்வு செய்யக்கோரி சீராய்வு மனுக்கள் ஏதும் தாக்கல்செய்யவில்லை. தண்டனையை நிறுத்திவைக்கவும் கோரவில்லை

குடியரசுத்தலைவருக்குக் கருணை மனுஅனுப்பி, தங்களின்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டுகோள் விடுத்து அவர் நிறுத்தினால் மட்டுமே தண்டனையை நிறுத்தி முடியும். குடியரசுத் தலைவருக்கு 7 நாள்களுக்குள்கருணைமனு அனுப்பக் கோரி குற்றவாளிகள் 4 பேருக்கும் கடந்த 28 ஆம் திகதி முறைப்படி நோட்டீஸ் வழங்கப்பட்டுவிட்டது. இவர்களின் மனுவுக்குக் குடியரசுத் தலைவர் ஏதும் பதில் அளிக்காவிட்டாலோ அல்லது குடியரசுத் தலைவருக்கு மனு அளிக்காவிட்டாலோ தண்டனை நிறைவேற்றப்படும்.

குற்றவாளிகளைவிரைவில்தூக்கிலிட வலியுறுத்திவரும் நிர்பயாவின் தாய் மற்றும் தூக்குத் தண்டனை வழங்கிய விசாரணை நீதிமன்றத்திற்கு கருணை மனு சமர்ப்பிக்க அளிக்க 7 நாள்கள் அவகாசம் வழங்கியது தொடர்பாகத் தகவல் தெரிவிக்க உள்ளோம். 7 நாள்களில் ஏதேனும் பதில் வராவிட்டால், தண்டனை நிறைவேற்றுவதற்கான சட்டப்பூர்வ வழிகளைத் தொடங்குவோம். ஒருவேளை குற்றவாளிகள் கருணை மனுத் தாக்கல் செய்யாவிட்டால், நீதிமன்றத்தில் கூறி, குற்றவாளிகள் 4 பேருக்கும் தூக்கத்தண்டனை நிறைவேற்றுவதற்கான வாரண்ட் வழங்குவோம் எனத் தெரிவித்தார்

இதற்கிடையே கடந்த 28 ஆம் திகதி சிறை நிர்வாகம் சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்ட பின் 4 குற்றவாளிகளும் அமைதியற்று, பதற்றத்துடன் காணப்படுகிறார்கள் என்று சிறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிந்தது ஜம்மு காஷ்மீர் மாநிலம்!



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் 2 யூனியன் பிரதேசங்களாக முறைப்படி பிரிந்தது. அவற்றுக்கான துணைநிலை ஆளுநர்கள் நேற்று (வியாழக்கிழமை) பதவியேற்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவின் கீழ் காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த ஓகஸ்டு 5 ஆம் திகதி ரத்துச் செய்தது. மேலும் அந்த மாநிலத்தை ஜம்மு – காஷ்மீர் மற்றும் லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாகவும் பிரித்தது. இது தொடர்பான காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம் – 2019 நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் நிறைவேறி சுமார் 3 மாதங்கள் ஆன நிலையில், காஷ்மீர் தொடர்பான நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. அதன்படி காஷ்மீர் இனிமேல் மாநிலம் இல்லை. அந்த மாநிலம் ஜம்மு – காஷ்மீர் மற்றும் லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிந்துவிட்டது.

இதில் ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு துணை நிலை ஆளுநராக கிரிஷ் சந்திரா மர்மு மற்றும் லடாக் யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநராக ஆர்.கே.மாத்தூர் ஆகியோரை மத்திய அரசு ஏற்கனவே அறிவித்து இருந்தது. அவர்கள் இருவரும் நேற்றுப் பதவியேற்றனர்.

அதன்படி கிரிஷ் சந்திரா மர்மு மற்றும் ஆர்.கே.மாத்தூர் இருவரும் முறையே ஸ்ரீநகர், லே ஆகிய இடங்களில் பதவியேற்றுக் கொண்டனர். அவர்கள் இருவருக்கும் காஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கீதா மிட்டல் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு புதுச்சேரியில் இருப்பது போல சட்டசபை இருக்கும். அங்கு பொலிஸ் மற்றும் சட்டம் – ஒழுங்கு போன்றவை மத்திய அர சின் கட்டுப்பாட்டில் இருக்கும். நிலம் மட்டுமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் வசம் இருக்கும்.

அதேநேரம் லடாக் யூனியன் பிரதேசம், சண்டிகாரைப்போல சட்டசபை இன்றி செயல்படும். அங்கு ஆட்சி முழுவதும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

இந்த நடவடிக்கை மூலம் இந்தியாவின் மாநிலங்களின் எண்ணிக்கை 28 ஆக குறைந்துள்ளது. அதே நேரம் யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. ஒரு மாநிலம் 2 யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இதற்கிடையே காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதை முன்னிட்டு மாநிலம் முழுவதும் நடை முறைப்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் பெரும்பாலும் அகற்றப்பட்டு உள்ளன. எனினும் காஷ்மீர் பள்ளத் தாக்கு பகுதியில் மட்டும் இணையத்தள சேவை தொடர்ந்து முடக்கப்பட்டு உள்ளது. அங்கு இயல்பு நிலை முழுவதுமாக இன்னும் திரும்பவில்லை.

இதைப்போல முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்தில் கைது செய்யப்பட்டிருந்த அரசியல் தலைவர்களும் தொடர்ந்து வீட்டுக்காவலிலேயே வைக்கப்பட்டு உள்ளனர். இதில் முன்னாள் முதலமைச்சர்க ளான பரூக் அப்துல்லா, உமர் அப் துல்லா, மெகபூபா முப்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

காஷ்மீர் மாநிலம் இரு யூனியன் பிரதேசங்களாக முறைப்படி பிரிக்கப்பட்டு உள்ள நிலையில், காஷ்மீரை




மாநிலமாகவே தொடரச்செய்ய வேண்டும் என தேசிய மாநாட்டுக்கட்சி கடைசிநேர வேண்டுகோள் விடுத்து உள்ளது. மன்னர் குலாப் சிங் உருவாக்கிய காஷ்மீர் மாநிலம் 200 ஆண்டுகள் பழமையானது என்றும், அது இந்தியாவின் கிரீடம் எனவும் அந்த கட்சியின் மாகாண தலைவர் தேவேந்தர் சிங்ரானா கூறியுள்ளார்.

காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதான் எனவும், அதையே காஷ்மீர் அரசியல் சட்டமும் கூறுவதாகவும் தெரிவித்த ரானா, இதில் தங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றும் கூறினார். யூனியன் பிரதேசங்களாக மாற்றுவதால், தாங்கள் தனித்து விடப்படுகின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

# தேசியப் புலனாய்வு அதிகாரிகள் நாகை,கோவையில் சோதனை

கோவை,நவ.01

தமிழகத்தில் கோவை மற்றும் நாகூரில் நேற்று தேசியப் புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் முகாமிட்டு பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர்.

தமிழகத்தில் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்படுதல், பயங்கரவாத கருத்துக்களைப் பரப்புதல், பயங்கரவாத தாக்குதலுக்கு திட்டமிடுதல் போன்றவை தொடர்பாக உளவுத்துறை அளித்த தகவலின் அடிப்படையில் தேசிய புலனாய்வு முகமை கோவை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப் பற்றி உள்ளது.

பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பில் உள்ளவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கோவையில் நேற்றுக் காலை முதலே என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். லாரிபேட்டை மற்றும் ஜி.எம். நகரில் உள்ள இரண்டு பேரின் வீடுகளில் இந்தச் சோதனை நடைபெற்றது.

இதேபோல் நாகை மாவட்டம் நாகூரிலும் என்.ஐ.ஏ அதிகாரிகள் முகாமிட்டு, ஒருவரின் வீட்டில் சோதனை நடத்தினர்.

# இங்கிலாந்தில் டிசெம்பர் 12இல் திடீர்த் தேர்தல்!

லண்டன்,நவ.01

இங்கிலாந்து நாடாளுமன்றத்துக்கு டிசெம்பர் 12 ஆம் திகதி 'திடீர்' தேர்தல் நடத்தப்படுகிறது. இதற்காகக் கட்சிகள் முழு வீச்சில் வரிந்து கட்டுகின்றன.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை செய்து முடிப்பதில் இழுபறி ஏற்பட்டது. ஒக்டோபர் 31 ஆம் திகதிக்குள் (நேற்றைக்குள்) ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இங்கிலாந்து வெளியேற கெடு விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கிலாந்து நாடாளுமன்றம், இதை ஒப்புக்கொள்ளவில்லை. கெடுவை நீடிக்க வேண்டும் என்று கிடுக்கிப்பிடி போட்டது.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டால், சாக்கடை குழியில் விழுந்து சாவேன் என்று சொன்ன பிரதமர் போரிஸ் ஜோன்சன், கடைசியில் இறங்கி வந்தார்.

இதையடுத்து ஐரோப்பிய ஒன்றியம், இந்தக் கெடுவை மேலும் 3 மாதங்களுக்கு அதாவது, ஜனவரி மாதம் 31 ஆம்திகதி வரை நீடிக்க சம்மதம் தெரிவித்து விட்டது.

இந்த நிலையில், பிரதமர் போரிஸ் ஜோன்சன் நாடாளுமன்றத்துக்குத் திடீர் தேர்தல் நடத்தி மக்களின் ஆதரவை பெறத் தீர்மானித்தார்.

ஒப்பந்தம் இன்றி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இங்கிலாந்து விலகாது என்ற வாக்குறுதியை பிரதமர் அளிக்கிறபோது, திடீர் தேர்தலை ஆதரிக்கத் தயார் என எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் தலைவர் ஜெரேமி கார்பின் அறிவித்தார்.

இதையடுத்து டிசம்பர் 12 ஆம் திகதி 'திடீர்' தேர்தல் நடத்துவதற்கான பிரேரணை ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி சார்பில் நாடாளுமன்ற மக்கள் சபையில் கொண்டு வந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் பிரேரணைக்கு ஆதரவாக 438 எம்.பி.க்களும், எதிராக 20 எம்.பி.க்களும் வாக்களித்தனர். பெருவாரியான எம்.பி.க்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததையால் அது நிறைவேறியது.

எதிர்க்கட்சியான தொழிற் கட்சி, நாடாளுமன்ற தேர்தலை டிசம்பர் 12 ஆம் திகதிக்குப் பதிலாக 9 ஆம்திகதி நடத்த வேண்டும் என்று கொண்டு வந்த பிரேரணை மக்கள் சபையில் நிராகரிக்கப்பட்டு விட்டது.

இதையடுத்து டிசம்பர் 12 ஆம் திகதி தேர்தல் என்பது உறுதியாகி விட்டது.

அங்கு 1923 ஆம் ஆண்டுக்குப் பிறகு டிசம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படுவது இதுவே முதல் முறை.

அது மட்டுமின்றி 2017 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி கடைசியாக அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. எனவே இரண்டரை ஆண்டுகளில் நாடாளுமன்றம் மறு தேர்தலை சந்திக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றாக வேண்டும் என்று பிரதமர் போரிஸ் ஜோன்சன் கங்கணம் கட்டிக்கொண்டு களம் இறங்குகிறார். இதுபற்றி கருத்து தெரிவித்த அவர், ஒரு கடினமான தேர்தலைச் சந்திக்க நான் தயாராகி விட்டேன் என்று கூறினார்.

மேலும், ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கும், நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள முடக்கத்தை முடிவுக்கு கொண்டு வரவும் மக்களின் உத்தரவை தேர்தல் பெற்றுத்தரும் என்று அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தி உள்ளார். கொன்சர்வேடிவ் கட்சி முழு முனைப்புடன் தேர்தல் களத்தில் குதிக்கிறது.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சியும், கொன்சர்வேடிவ் கட்சியைச் சந்திக்க தயாராகிறது.

இதுபற்றி அந்த கட்சித்தலைவர் ஜெரேமி கார்பின் கூறும்போது, திடீர் தேர்தல், நாட்டை மாற்றுவதற்கு ஒரு தலைமுறையில் கிடைத்துள்ள வாய்ப்பு என்று குறிப்பிட்டார்.



# உலகிலேயே வயதான மூதாட்டி 123ஆவது வயதில் மரணமானார்



உலகிலேயே மிகவும் வயதான மூதாட்டியாக அறியப்பட்ட ரஷ்யாவை சேர்ந்த 123 வயது மாது உயிரிழந்தார்.


அஸ்ட்ரகான் பகுதியை சேர்ந்த தன் சில்யா பிசம்பெயேவா என்ற மூதாட்டி தான் உலகிலேயே மிகவும் அதிக வயதானவர் என்று நம்பப்படுகிறது.

1896 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி அவர் பிறந்தார் எனக் கருதப்படுகிறது.

அந்த மூதாட்டிக்கு 10 பேரக்குழந்தைகள், 13 கொள்ளுப்பேரக்குழந்தைகள், 2 எள்ளுப் பேரக்குழந்தைகள் உள்ளனர். தனது 123 ஆவது வயதில் அமைதியான முறையில் அவரது உயிர் பிரிந்ததாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரது உடல் குடும்பத்தினருக்கான கல்லறையிலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும், கிராம மக்கள் அனைவரும் இறுதிச்சடங்கில் பங்கேற்றனர் எனவும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன

# கலிபோர்னியாவில் பேய்த் திருவிழாவில் துப்பாக்கிச் சூடு; 3 இளைஞர்கள் சாவு!






அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற ஹாலோவீன்(பேய்த்) திருவிழாக் கொண்டாட்டத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து 3 இளைஞர்கள் உயிரிழந்தனர்.

பேயாக சுற்றித்திரியும் ஆவிகள், தங்களுக்கு தீங்கு இழைக்கக்கூடாது என்பதற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் ஒக்டோபர் 31ஆம் திகதி ஹாலோவீன் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக நேற்று கலிபோர்னியாவின் லோங் பீச் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஹாலோவீன் திருவிழா கொண்டாடப்பட்டது. அப்போது திடீரென சுமார் 20 முறை துப்பாக்கிக் குண்டு சத்தம் கேட்டது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்தத் துப்பாக்கிச்சூட்டில் விழாவில் பங்கேற்ற 3 இளைஞர்கள் உயிரிழந்தமையோடு, மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்து வந்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியவர் யார், எதற்காக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்துகின்றனர்.

# பேய்த் திருவிழாவுக்கு சூரியனின் புகைப்படம்



ஹாலோவின் தினத்தையொட்டி அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா வெளியிட்டுள்ள சூரியனின் புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகிவருகிறது.

தீய சக்திகளை விரட்டும் ஹாலோவின்(பேய்த்) திருவிழா நேற்று ஒக்டோபர் 31ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்தத் தினத்தில் அடுத்தவர்களை பயமுறுத்தும் விதமாக பூசணிக்காய் உள்ளிட்டவற்றை விளக்குகள் கொண்டு மக்கள் அலங்கரிப்பார்கள்.

இந்நிலையில், ஹாலோவினுக்கு அலங்கரிக்கப்படும் ஜாக்கோ லேண்டர்ன் வடிவ பூசணிக்காயை போல சூரியன் காட்சியளிக்கும் சுவாரஸ்ய புகைப்படம் ஒன்றை நாசா வெளியிட்டுள்ளது.

சூரியனும்கூட ஹாலோவினைக் கொண்டாடத் தயாராகிவிட்டது என இப்புகைப்படம் குறித்து நாசா குறும்பாக குறிப்பு குறிப்பிட்டுள்ளது.

இப்புகைப்படம் 2014ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கமரூனில் மோசமான நிலச்சரிவு இதுவரையில் 42 உடல்கள் மீட்பு

மத்திய ஆபிரிக்க நாடான கமரூனில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள பஃபுஸாம் என்ற மலைகிராமத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அப்பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் கிராமத்தின் பெரும் பகுதி மண்ணுக்குள் புதைந்தது.

இது குறித்து தகவலறிந்த மீட்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். நிலச்சரிவில் சிக்கிய 26 குழந்தைகள் உள்பட 42 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் பல வீடுகள் மண்ணுக்குள் அமிழ்ந்திருக்கின்றமையால் உயிரிழந்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.



காலைக்கதிர் Kalaikathir



# ஜனாதிபதித் தேர்தலில்

# தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமா?

இலங்கைத்தீவில் கடந்த பல தசாப்தங்களாக நீடித்துவரும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானதாகும். அந்த நோக்கில் இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான முடிவுகளை எடுத்து பேரம்பேச வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

இத்தேர்தலில்போட்டியிடும்பிரதான கட்சிகள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் ஏற்கனவே தமது உத்தியோகபூர்வமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதித் தேரதலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் நலன்கள் சார்ந்து முன்வைக்கப்படுகின்ற எந்தவொரு நிபந்தனையையும் ஏற்கமாட்டேன் என்றும், ஜனநாயக தேசிய முன்னணி வேட்பாளர் சஜித் பிறேமதாஸா தமிழர் தரப்புடன் எந்தவொரு உடன்படிக்கைக்கும் செல்லமாட்டேன் என்றும் கூறி தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புறந்தள்ளியுள்ளனர்.



குறிப்பாக ஒற்றையாட்சித்தீர்வைத்தவிர வேறு எதற்கும் தாம் இணங்க மாட்டோம் எனவும், ஏற்கனவே உள்ள ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கம் மட்டுமே தமக்கு உண்டெனவும் வேண்டுமானால் ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பரவலாக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளனர். சமஷ்டி என்பதனை அடியோடு நிராகரிப்பதாகவும் அனைத்துத் தரப்புக்களும் கூறியுள்ளன.

இதற்கு மேலதிகமாக இது ஓர் சிங்கள பௌத்த நாடு என்பதனையும் அதன் அடையாளத்திற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் தாம் செயற்படுவோம் எனவும் சிறிலங்கா படைத்தரப்புக்கள் போர் வீரர்கள் என்றும் அவர்களை எந்தவொரு நீதிமன்றின் முன்னாலும் நிறுத்த மாட்டோம் என்றும் அவர்களைப் பாதுகாப்பது தங்களது தார்மீகக் கடமை என்றும் அவர்களது கௌரவத்தை தாம் நிலைநாட்டுவோம் என்றும் கூறியுள்ளனர்.

மேற்படி கொள்கைகளை அவர்கள் நடைமுறைப்படுத்தும்போது தமிழ்த் தேசத்தின் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பு மேலும் தீவிரமடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இந்தக் கொள்கைப் பிரகடனங்கள் வெளியாகியுள்ள நிலையில் தமிழ் மக்களாகிய நாம் இத் தேர்தலில் இவர்களுக்கு வாக்களிப்பதால் எந்த நன்மையும் அடைந்துவிடப்போவதில்லை என்பது வெளிப்படையானது.

இந்நிலையில் இத்தேர்தலில் கலந்துகொண்டு மேற்குறித்த நிலைப்பாடுகளையுடைய பிரதான வேட்பாளர் எவருக்காவது வாக்களிப்பதானது தமிழ்த் தேசம் தனது அடிப்படை நிலைப்பாடுகளைக்கைவிட்டு சிங்கள பௌத்தத்தினுள் கரைந்து செல்லத் தயார் என்பதான தவறான செய்தியை உலகத்திற்கு வழங்குவதாக அமையும்.

> ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு இதுவே!

இப்பின்னணியிலே ஈழத் தமிழ்த் தேசம் இந்தத் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காது புறக்கணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதே தவிர மாற்று வழிகள் எதுவுமே கிடையாது.

எனவே இவ் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காது புறக்கணிக்குமாறு தமிழ் மக்களை கோருகின்றோம். புறக்கணிப்பை கைவிட்டு வாக்களிக்க வேண்டுமானால்! தேர்தல் புறக்கணிப்பு முடிவை தமிழ் மக்கள் கைவிட்டு தமக்கு வாக்களிக்க வேண்டும் என யாராவது பிரதான வேட்பாளர்கள் விரும்புவார்களாக இருந்தால் அத் தரப்பும் அத் தரப்பினை ஆட்சிக்குக் கொண்டுவர விரும்பும் சர்வதேச வல்லரசுகளும் பின்வரும் கோரிக்கைகளை சட்ட ரீதியாக அங்கீகரிக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தினரும், ஜனாதிபதி வேட்பாளர்களும் உத்தரவாதம் வழங்க வேண்டிய கோரிக்கைகள்.

1. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய ஒற்றையாட்சி அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கை நிராகரிக்கப்படல் வேண்டும்.

2. தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கைத் தீவின் இணைந்த வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தேசம் என்பதனையும் அதன் தனித்துவமான இறைமையையும் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன சுயநிர்ணய உரிமையை முழுமையாக அனுபவிக்கக்கூடிய சமஷ்டித் தீர்வை பெற்றுத் தருவதனை உறுதி செய்ய வேண்டும்.

3. தமிழ்த் தேசத்தின மீது இடம்பெற்ற மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக்குற்றங்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. வடக்கு – கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனப்படுத்தப்பட்டு இப்பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை கையாள்வதற்கு வடக்கு – கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் ஓர் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கான நிதி நேரடியாகக் கிடைப்பதனை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும்.

5. பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்படல் வேண்டும்.

6. தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

7. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது விவகாரத்தில் சர்வதேச பொறிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

8. சிறிலங்கா ஆயுதப்படைகள் மீதான போர்க்குற்றம், இனவழிப்புக் குற்றம் தொடர்பான விசாரணைகள் முடியும் வரையில் – சிறிலங்கா இராணுவம் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

9. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் அரச படைகள் போருக்கு முன்னர் இருந்ததுபோல தமிழ் மக்களின் பாவனையிலிருந்த தனியார் மற்றும் அரச காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு அக்காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

10. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

11. வடக்கிற்கு மகாவலியை திசை திருப்புதல் என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு மாத்திரமே திட்டமிட்டு செயற்படும் சபையாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இயங்குவதால் அச்சபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்படல் வேண்டும்.

12. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஸ்கந்த நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

13. தொல்லியல் திணைக்களம் , வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் வழிபாட்டுத் தல ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் ஊடாக நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட



அரசிதழ்கள் (வர்த்தமானி அறிவித்தல்கள்) இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

14. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர் யுவதிகளின வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடமிருந்து நேரடி முதலீடுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் நிதிகளையும் கையாள்வதில் தற்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்.

15. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அரச மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்புக்களில் அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
செல்வராசா கஜேந்திரன்
தலைவர், பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# மகேஷ் சேனநாயக்க யாழ். நகரில் பிரசாரம்







யாழ்ப்பாணம், நவ. 01

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க யாழ்ப்பானத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

சிவில் அமைப்புக்களின் சார்பில் பொது வேட்பாளராகக் களமிறங்கி உள்ள மகேஷ் சேனநாயக்க தனது தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் பல இடங்களுக்கும் சென்று பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை யாழ் மத்திய பஸ் நிலையத்தில் தனது ஆதரவாளர்களுடன் இணைந்து பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தார்.

(ஐ - 07)

# பஷீர் சேகு தாவூத், ஹசன் அலி கோட்டாவுடன் இணைந்தனர்



கொழும்பு, நவ. 01

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு முன்னாள் முக்கிய பிரமுகர்கள், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக் ஷவுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகு தாவூத் மற்றும், அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் ஹசன் அலி ஆகியோரே, கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கவுள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

ஐக்கிய சமாதானக் கூட்டணி என்ற பெயரில் இயங்கும், அமைப்பின் தலைவராக பஷீர் சேகு தாவூத்தும், அதன் செயலராக ஹசன் அலியும் இருக்கின்றனர். இந்த அமைப்பின் ஊடாகவே அவர்கள், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ்பேசும் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தியிருந்த பஷீர் சேகு தாவூத் பின்னர், சுயேச்சையாக போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தியிருந்தார்.

எனினும், அவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்யப் போவதில்லை எனப் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே பஷீர் சேகு தாவூத் இப்போது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கவுள்ளார் எனக் கூறியுள்ளார். (ஐ)

# வவுனியாவில் 61 பேருக்கு டெங்கு

வவுனியா, நவ. 01

வவுனியாவில் 61 பேருக்கு டெங்கு பரவியுள்ள நிலையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்த தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் வவுனியா காரியாலயத்துக்கு எதிராக வவுனியா பொதுச் சுகாதாரப் பணிமனையில் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து காணப்படுவதுடன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 61 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் வவுனியா நகர் முழுவதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் டெங்கு நோய் பரவும் வகையில் காணப்படும் இடங்கள் சோதனை செய்யப்படுவதுடன், அவற்றை அழிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்த நிறுவனத்தின் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனைக்குட்படுத்தியவேளை டெங்கு நோய் பரவும் நிலையில் பல இடங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

(ஐ - 100)

# மீன்பிடிப் படகுகளை விடுவித்து தராவிடின் தூதரகத்தை மீண்டும் முற்றுகையிட நேரும்

## கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 01

விடுதலை செய்யப்பட்டு உள்ள மீனவர்களின் மீன்பிடி படகுகளை விடுவித்து தராவிட்டால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை மீண்டும் முற்றுகை இடுவோம் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவர் வே. தவச்செல்வன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தீவகம், மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் 18 பேர் இந்தியக் கடற்படையினரால் சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களின் துரித விடுதலைக்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனம் மேற்கொண்டது. குறிப்பாக தீபாவளி பண்டிகைக்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதரகத்தை முற்றுகையிட்டது.

இந்நிலையில் இந்த மீனவர்கள் 18 பேரும் விசேட விமானத்தில் புதன்கிழமை நள்ளிரவு அனுப்பி வைக்கப்பட்டு யாழ். சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இது குறித்து சம்மேளனத் தலைவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் -

எமது மீனவர்களை துரிதமாக விடுவித்து தந்த இந்திய அரசுக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகத்துக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆயினும் எமது மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகள் திருப்பி தரப்படவில்லை. அவற்றைத் திருப்பித் தர உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். இதற்கான அழுத்தங்களையும் எமது சம்மேளனம் வழங்கி கொண்டே இருக்கும்.

குறிப்பாக முதலில் இந்தியத் துணை தூதுவருடன் பேச்சு நடத்தி சுமார் 15 நாள்கள் அவகாசத்தில் மீன்பிடிப் படகுகளை மீள தர வேண்டும் என்று கோருவோம். இந்த விடயத்தில் இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுப்பதாக இல்லை என்று நாம் கண்டு கொள்கின்ற பட்சத்தில் துணைத் தூதரகத்தை மீண்டும் முற்றுகையிட நேரும்.

மீனவர்களின் ஒன்றுபட்ட பலம் மூலமாக மாத்திரமே எமது உறவுகளின் விடுதலை சாத்தியமாகி இருக்கின்றது. மாறாக எந்த தரப்பு அரசியல்வாதிகளும் இவ்விடுதலையைப் பெற்றுதரவே இல்லை. இது தேர்தல் காலம் என்பதால் அரசியல்வாதிகள் எவரேனும் இவர்களை விடுவித்து தந்திருப்பதாக உரிமை கோரக் கூடும்.

எமது சம்மேளனத்தில் 30000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உறுப்புரிமை பெற்று இருக்கின்றனர். யாழ். மாவட்ட மீனவர்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை நாம் பட்டியல் இட்டு பிரதானமான ஜனாதிபதி வேட்பாளர்களுக்குச் சமர்ப்பித்து உள்ளோம். அவற்றை நிறைவேற்றி தருவதற்கு முறையான உத்தரவாதம் வழங்குபவருக்கு யாழ். மாவட்ட மீனவர் சமூகம் ஒருமனதாக ஆதரவு வழங்கும். குறிப்பாக இந்திய மீனவர்களாலும், இந்திய பாதுகாப்பு தரப்பினர்களாலும் எமது மீனவ உறவுகள் எதிர்கொண்டு வருகின்ற அச்சுறுத்தல்களுக்கு நிரந்தர தீர்வுகள் பெற்றுத் தரப்பட வேண்டும் - என்றார். ’

(ஐ)



# பங்களாதேஷ் அணிக்கு புதிய தலைமை

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசனுக்குச் சர்வதேசப் போட்டிகளில் விளையாட ஐ.சி.சி. தடை விதித்துள்ள நிலையில், இந்தியா தொடருக்கான பங்களாதேஷ் அணித் தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து ருவென்ரி 20 மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரண்டு வகை அணிக்கும் ஷகிப் அல் ஹசன் தலைவராகச் செயற்பட்டு வந்தார்.

ஐ.சி.சியின் இரண்டு ஆண்டுகள் தடை காரணமாக பங்களாதேஷ் ருவென்ரி 20 கிரிக்கெட் அணிக்கு மெஹ்முதுல்லாவும், டெஸ்ட் அணிக்கு மொமினுல் ஹக்யூவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.







# தேசிய கோலூன்றிப் பாய்தலில் வடக்குக்கு சாதனையுடன் பதக்கம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணம் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று அனைத்துப் பதக்கங்களையும் கைப்பற்றியது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அருணோதயக் கல்லூரி மாணவன் நெப்தலி ஜொய்சன் 4.61மீற்றர் உயரத்துக் குப் பாய்ந்து படைத்திருந்த சாதனையை இந்த வருடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் புவிதரன் 4.82 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து முறியடித்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் புவிகேதரன் 4.40மீற்றர்உயரத்துக்குப்பாய்ந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் கபில்சன் 4.20 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றார். (ஐ)

# முதல் பகலிரவு போட்டி 2 அணிகளுக்கும் உற்சாகமான புதிய அனுபவமாக அமையும்

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் முதல் பகலிரவு டெஸ்ட் போட்டியானது, இரு அணிகளுக்கும் புதிய அனுபவமாக அமையும் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரஸல் டொமிங்கோ தெரிவித்துள்ளார்.

அடுத்த மாத தொடக்கத்தில் இந்தியா செல்லும் பங்களாதேஷ் அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.



இதில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டி, பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறவுள்ளது. இரு அணிகளுக்குமே இப்போட்டி முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி என்பதால், இப்போட்டி மீதான எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.


இந்த நிலையில் இப்போட்டிக் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரஸல் டொமிங்கோ கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'ஒரு பயிற்சியாளராக இதனை ஒரு நல்ல வாய்ப்பாகப் பார்க்கிறேன். இந்திய அணியும் பிங்க் நிற பந்தில் விளையாடியதில்லை, நாங்களும்விளையாடியதில்லை. ஆகவே இரு அணிகளுக்கும் உற்சாகமான ஒரு புதிய அனுபவமாக இது அமையும்.

இந்திய அணி உலகின் நம்பர் 1 அணி. ஆனாலும் பிங்க் நிற பந்தில் விளையாடுவதில் இரு அணி வீரர்களுக்குமே ஒரு நிச்சயமின்மை இருக்கும். இரு அணிகளுக்குமே என்ன எதிர்பார்க்கப் போகிறோம் என்பது தெரியாது. இந்த நிச்சயமின்மை எங்களுக்குச் சாதகமாக அமையும்.

பிங்க் நிற பந்து குறித்து எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. என்னால் இதனை வீரர்களுக்கு சொல்லிக் கொடுக்க முடியும். ஆனால், முதல் டெஸ்ட் மீது தான் தற்போது கவனம் என கூறினார்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டி, எதிர்வரும் நவம்பர் 22ஆம் திகதி முதல் 26 திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.




# இலங்கை அணிக்கு மீண்டும் தோல்வி!

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி20 போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

முதலாவதுஆட்டத்தில்இலங்கைபடுதோல்வியடைந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று முன் தினம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 19 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களை மட்டும் பெற்றது. விக்கெட் கீப்பர் குசல் பெரேரா 27 ஓட்டங்களையும், குணதிலக 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணியின் சர்பாக ஸ்ரான்லேக், கம்மின்ஸ், சம்பா, அகர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணி 13 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து இலக்கை அடைந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. வோர்ணர் 60 ஓட்டங்களையும் சிமித் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

# ரோஜர் பெடரர் விலகல்!

ரென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமைக்குரிய, சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஏ.டி.பி கிண்ண டென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

உலகளவில் சிறப்பாக விளையாடும் 24 அணிகள், ஏ.டி.பி கிண்ண டென்னிஸ் தொடரில் பங்கேற்க இருக்கின்றன.

இதில் சுவிற்ஸர்லாந்து அணியை பிரதிநிதித்துவப்படுத்தி ரோஜர் பெடரர், களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், போட்டித்தொடர்நடைபெறும் இரண்டு வாரங்களும் குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவதாக கூறி, ரோஜர் பெடரர், இத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.



# சஜித்தின் தோல்வி உறுதியாகியுள்ளது

## கூறுகின்றார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, நவ. 01

தமிழ்க் கட்சிகளின் முடிவினால், சஜித் பிரேமதாஸவின் தோல்வி உறுதி செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டு மக்கள் இரண்டு பிரதான தரப்பு சார்ந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும், சி.வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட தரப்பினர் சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லையென அறிவித்துள்ளனர்.



எனவே சஜித்தின் பெரும் நம்பிக்கையாக காணப்பட்ட, வடக்கு – கிழக்கு மக்களின் வாக்கு தற்போது இல்லாமல் போயுள்ளது. இதன் காரணமாக சஜித் பிரேமதாஸவின் தோல்வி தற்போதே உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# புலிகளின் ஜி.பி.எஸ். கருவி முள்ளிவாய்க்காலில் மீட்பு






முல்லைத்தீவு, நவ. 01

விடுதலைப் புலிகளின் ஜி.பி.எஸ் நேவிகேட்டர் தொழில்நுட்பக் கருவி ஒன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணி உரிமையாளர் ஒருவர் விவசாய நடவடிக்கைக்காகக் காணி ஒன்றை நேற்றுக் காலை சுத்தம்செய்தபோதே இந்தக் கருவி மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட கருவியில் த.வி.பு 055 என்று அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் இது போன்ற நீர் எதிர்ப்பு மகெலன் கருவிகள் கடல்வழி பயணங்களின்போது பயன்படுத்தப் படுகின்றன.

ஆனால் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் விசேட படையணிகள் தரை மற்றும் கடல் வழி பயணத்தின்போதும் மற்றும் ஈரூடக தாக்குதல் இலக்குகளின் கணிப்பீட்டைப் பெறுவதற்கும் இந்தக் கருவிகளைப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

### முஸ்லிம்கள் வெளியேற்றம்:

# 29 ஆவது வருட நினைவு நாளை

யாழ்ப்பாணம், நவ.01

1990 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றிய 29 ஆகூது வருட தினத்தை நினைவு கூரலும், வாழ்வினை வலியுறுத்தலும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள சென்ஜோன் த பப்டிஸ்ட் தேவாலயத்தின் பரிஷ் மண்டபத்தில் சகவாழ்வுக்கான யாழ். மக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களின் விசேட உரையுடன், சர்வ மத தலைவர்கள், புத்திஜீவிகளின் பங்களிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# சஜித்தின் கூட்ட மேடையில் தமிழ்மொழி புறக்கணிப்பு

வவுனியா, நவ. 01

புதிய ஜனநாயக முன்னனியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பொதுக் கூட்டமேடையில் சிங்கள மொழிக்கு முதன்மை கொடுக்கப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வவுனியா, வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த நிலை ஏற்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். சஜித் பிரேமதாஸவின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிலும் அதிகமானவர்கள் தமிழ் பேசுபவர்களே. இந்த நிலையில் சஜித் பிரேமதாஸவின் பிரசாரக் கூட்ட மேடையானது இலத்திரனியல் சாதனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த மேடையில் வேட்பாளர் தொடர்பான வசனங்கள் அனைத்தும் முழுமையாகச் சிங்கள மொழியில் காணப்பட்டன.

தேசிய ஒருமைப்பாட்டு மொழிகள் அமைச்சர் மனோ கணேசனும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

தமிழ் மக்களிடம் வாக்கு கேட்க வரும் போதே தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்காத நிலையில் எதிர்காலத்தில் சஜித்தின் செயற்பாடுகள் எப்படி அமையும் எனத் தமிழ் மக்கள் பலரும் கவலை வெளியிட்டனர். (ஐ-100)






# ஜனாதிபதித் தேர்தல் 2019

## தபால் மூல வாக்காளர்களுக்குப் பணிவான வேண்டுகோள்

**அன்பான சகோதர சகோதரிகளே வணக்கம்!**

ஒரு தமிழர் இலங்கையின் ஜனாதிபதியாக வருவதைக் கனவிலும் காணமுடியாது. நீங்கள் கேட்கலாம் - அவ்வாறாயின் நீர், ஏன் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றீர்? எனக் கேட்கலாம்.

தமிழர் தாயகத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரமுகர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் அந்த முயற்சி இறுதி நேரத்தில் தோல்வியடையும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறானதொரு சூழலில் அந்த முயற்சி தோல்வியடைந்து விடக்கூடாது, அவர்களின் உழைப்பு வீணாகிவிடக் கூடாது என்பதற்காக நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

பிரதான சிங்கள வேட்பாளர்கள் எவருமே தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் எதனையுமே ஏற்றுக்கொள்ளாத நிலையில், தமிழ் மக்களாகிய நீங்கள் தென்னிலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் ஒரு தெளிவான செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. அதற்கான ஒரு வரலாற்று வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனை நீங்கள் தவறவிடமாட்டீர்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். என்னை மறந்துவிடுங்கள். நான் உங்கள் முன்னால் ஒரு வெறும் குறியீடு மட்டுமே. தமிழ்த் தேசியத்தை மட்டும் மனதில் நிறுத்தி வாக்களியுங்கள். **மீன் சின்னத்திற்கு** நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் தமிழ்த் தேசியத்தை காப்பாற்றுவதற்கான உங்கள் திடசித்தமாகும். நாம் எமது வாக்குகளால் சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எமது நிலைப்பாட்டைச் சொல்லுவோம். எங்களுடைய உரிமைகளை ஏற்றுக்கொள்ளாத உங்களுக்கு எங்களுடைய வாக்குகளைத் தரமாட்டோம் என்பதை உரத்துச் சொல்வோம். சிங்கள தேசத்தின் தேர்தலை தமிழர் தேசத்திற்கான தேர்தலாக மாற்றுவோம்.

எம்.கே. சிவாஜிலிங்கம்



தமிழ்ப் பொது வேட்பாளர்

விளம்பர அனுசரணை : புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள்


# வாக்களிப்புக்குச் செல்ல படகுகளும் தயார்நிலை

கொழும்பு, நவ. 01

வானிலை அறிக்கைகளின்படி, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலத்தில் கடும் மழை பெய்யக்கூடும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தேர்தல் வாக்களிப்புக்களுக்காக உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் குறிப்பாக படகுகள் உட்பட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## வடமாகாண

# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**




## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**TAMIL NATIONAL GREEN ORGANIZATION**

# ஓடும் எக்ஸ்பிரஸ் ரயிலில் தீ! 67 அப்பாவிப் பயணிகள் சாவு!!

## பல டசின் கணக்கானோருக்கு எரிகாயம்; பாகிஸ்தானில் பயங்கரம்



இஸ்லாமாபாத்,நவ.01

பாகிஸ்தானில் தேஸ்காம் எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தானில் கராச்சி – ராவல்பிண்டி இடையே தேஸ்காம் எக்ஸ்பிரஸ் ரயில் தினமும் இயக்கப்படுகிறது.

கராச்சியில் இருந்து ராவல்பிண்டிக்கு புறப்பட்ட இந்த ரயில் நேற்றுக் காலை ரகிம் யார் கான் அருகே உள்ள லியாகத்பூரில் சென்றுகொண்டிருந்த போது ஒரு பெட்டியில் திடீரென தீப்பிடித்தது. காற்றின் வேகத்தில் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அருகில் உள்ள 2 பெட்டிகளுக்கும் தீ பரவியது.

இதையடுத்து ரயில் நிறுத்தப்பட்டது. மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்படுத்தி உள்ளே சிக்கியவர்களை மீட்டனர். இந்த விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர் என முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் பலி எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளதாகவும், பலர் காயங்களுடன் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் எனவும் பின்னர் தகவல்கள் வெளியாகின. பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளனர். அவர்களில் யாரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் லியாகத்பூரில் உள்ள டி.எச்.கியூ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு உள்ளனர். காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் பஹவல்பூரில் உள்ள பஹவால் விக்டோரியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களை மீட்பதற்காக முல்தானில் இருந்து ஓர் இராணுவ ஹெலிக்கொப்டரும் அனுப்பப்பட்டு இருந்தது.

பயணிகள் காலை உணவு சமைத்த போது, சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் இந்த தீ விபத்து ஏற்பட்டது என பாகிஸ்தான் ரயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேஸ்காம் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு மனித உரிமைகள் அமைச்சர் ஷிரீன் மசாரி பிரார்த்தனை மற்றும் இரங்கல் தெரிவித்துள்ளார்.



## கிளிநொச்சியில் 102 நிலையங்களில் தபால் வாக்களிப்பு

கிளிநொச்சி, நவ. 01

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் 102 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ், இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியோர் 52 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கின்றனர்.

மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு 50 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளையும் மாவட்ட உதவி தேர்தல் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

தபால்மூலவாக்களிப்புக்குகிளிநொச்சி மாவட்டம் 8 வலயங்களாக பிரிக்கப்பட்டு 102 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு 292 தெரிவத்தாட்சி அலுவலர்கள் கடமையாற்றும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்பு இன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)




### வவுனியாத் தமிழ் சங்கம் நடத்தும்

## மனித சமூகமும் பொருளாதார மேம்பாடும்

### சிந்தனையரங்கம்

வவுனியாத் தமிழ்ச் சங்கம் மாதத்தின் முதல் ஞாயிறு தோறும் நடத்திவரும் சிந்தனையரங்க வரிசையில் மனித சமூகமும் பொருளாதார மேம்பாடும் என்னும் தொனிப்பொருளில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகராலய பாலாம்பிகை மண்டபத்தில் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை பொறியியலாளர் நா.சிவகுமார்,லோஜினிதம்பதி ஏற்றிவைக்க தமிழ் வாழ்த்தினை செல்விகள் சிவராசா சுவேதிகா,ரங்கநாதன் தர்சிகா ஆகியோர் பாடுவார்கள். தலைமையுரையினைத் தொடர்ந்து தொடக்கவுரையினை வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி க.சுவர்ணராஜா நிகழ்த்துவார்.

சிந்தனையுரைகள் வரிசையில் ஓய்வாக இருந்தபடியே பணமீட்ட நம்பகமான சிறந்த வழிகள் என்னும் தலைப்பில் வங்கி வைப்பீட்டு முறைகள், பங்குச்சந்தை, நிலம், தங்கம் ஆகியவை பற்றி வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் க.சத்தியதாசனும் அறிந்தோ அறியாமலோ இந்த முதலீட்டைச் செய்யாதீர்கள், தண்டனைக்காளா வீர்கள் என்னும் தலைப்பில் சீட்டு, பிரமிட், உண்டியல், சட்ட முறைமையற்ற ஏனையவை பற்றி இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் கு.சிவஞானசுந்தரமும் அதனைப் பெறுவானேன்? உயிரை விடுவானேன்? என்னும் தலைப்பில் நுண் நிதிக் கடன் பற்றி டிரான்ஸ்பரென்சி இன்ரநாஷனல், ஸ்ரீலங்காவின் செயற்றிட்ட முகாமையாளர் திருமதி. திபோன் வினோதினியும் உரையாற்றவுள்ளார்கள். கருத்துரைகளைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையினை கலாபூஷணம் மேழிக்குமரன் நிகழ்த்துவார்



## கலியுகத்தில் உனையன்றி வேறுதுணை ஏதையா!

ஈராறு முகமுடைய இனியதமிழ் கந்தவேளே
தீராதவினை யனைத்தும் தீர்த்துவிடும் கந்தவேளே
மாறாத சூரரது மனந்திருந்தும் வகையினிலே
மயில் சேவலாக்கி வரங்கொடுத்தாய் கந்தவேளே!

போராடும் குணமனைத்தும் போக்கிவிடு கந்தவேளே
பொய்களவு எனுமனைத்தும் பொசுக்கிவிடு கந்தவேளே
ஆறாத காதலுடன் அனுதினமும் வணங்குகிறோம்
ஐயாநீ ஓடிவந்து அரவணைத்துக் காத்துவிடு!

உண்ணாமல் நாமிருந்து உனைப்போற்றி நிற்கின்றோம்
எண்ணமெலாம் உன்நினைப்பே எப்போதும் இருக்குதையா
பண்கொண்டு உனைப்பரவி பாடியாடி நிற்கின்றோம்
பார்த்துவிடு திருக்குமரா பதம்பணிந்தே தொழுகின்றோம்!

மண்மீது பிறந்துநாம் வாழ்கின்ற பொழுதெல்லாம்
உன்மீது புலன்செல்ல உமைமைந்தா அருளிவிடு
கண்திறந்து பார்க்கையிலே கந்தாநீ வரவேண்டும்
கலியுகத்தில் உனையன்றி வேறுதுணை ஏதையா!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

# கோட்டாபய வெற்றி பெற்றால் 30 ஆண்டுகள் ஐ.தே.க. நிமிராது

## அடித்துக் கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ. 01
ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் இன்னும் 25 அல்லது 30 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியமைக்க முடியாமல் போகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் இன்னும் 25 அல்லது 30 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் காண முடியாது. எமது வாழ்க்கையில் அதனைக் காண முடியாது. அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் 80 வயதைக் கடந்த பின்னரே அவ்வாறானதொரு ஆட்சியைக் காண கூடிய நிலை ஏற்படும். எனவே, இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற வேண்டும் – என்றார். (ஐ)

# வேம்படி பாடசாலைக்கு நேற்று மிரட்டல் கடிதம்

## முன்னாள் அதிபரின் முகவரிக்கு வந்ததாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 01
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபரின் பெயரிடப்பட்டு அநாமதேயக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

திகதியிடப்படாத அந்தக் கடிதத்தில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இன்னும் ஒரு மாதத்தில் குண்டு வெடிக்கும் என்று ஆங்கில மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேம்படி பாடசாலை முன்னாள் அதிபர் வேணுகா சண்முகரத்தினம் என்ற பெயரில் பாடசாலை விலாசம் இடப்பட்டு வந்துள்ள அநாமதேயக் கடிதம் தொடர்பில் அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

முறைப்பாட்டாளரான பாடசாலை முன்னாள் அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதை அறிந்திருந்த தபால் உத்தியோகத்தர் அவர் இருக்கும் கொக்குவில் பகுதிக்குச் செல்லும் தபால் உத்தியோகத்தரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுள்ளார்.

நேற்றுக் காலை அவர் முன்னாள் அதிபரின் வீட்டுக்குச் சென்றபோது, அங்கே எவரும் இல்லாததால் கடிதத்தைப் படலையால் போட்டுவிட்டு வந்துள்ளார்.

நேற்று மதியம் வீடு வந்த முன்னாள் அதிபர் கடிதத்தைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார். (ஐ – 07)

# ஹேமசிறி, பூஜித் பிணை கோரி மனு

கொழும்பு, நவ. 01
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக அவர்கள் இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. இருவரும் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர்கள் பிணை கோரி மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

# இரு ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரத்துக்கு ரூ.76 கோடி!

கொழும்பு, நவ. 01
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கடந்த மூன்று வாரங்களில் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக 76 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளனர்.

இதில் பிரதான இரு கட்சிகளின் வேட்பாளர்களே அதிக பணம் செலவிட்டதாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவினங்களை மதிப்பிடுவதற்காக அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு வேலைத் திட்டத்தில் இரு வேட்பாளர்கள் மட்டும் தற்போது 76 கோடி ரூபாவைச் செலவிட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்தோடு ஏனைய 33 வேட்பாளர்களும் இதுவரை 200 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளனர் எனவும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு கேந்திரத்தின் தேசிய கூட்டிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சியின் வேட்பாளர்களில் ஒருவர் அச்சு ஊடகங்களுக்காக 4 கோடி 80 இலட்சம் ரூபாவையும் மின்னணு ஊடகங்களுக்காக 43 கோடி ரூபாவையும் செலவிட்டார்.

மற்றொரு வேட்பாளர் அச்சு ஊடகங்களுக்காக 13 கோடி ரூபாவும், மின்னணு ஊடகங்களுக்காக 15 கோடி ரூபாவும் செலவிட்டுள்ளார் என மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

# பழங்குடி ஆதிவாசிகள் சஜித்துக்கு ஆதரவளிப்பு

கொழும்பு, நவ. 01
பழங்குடி ஆதிவாசிகள் குழுவொன்று புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் இணைந்து கொண்டது.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று புதிய ஜனநாயக முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மகாஓயா மற்றும் அம்பாறைப் பிரதேசங்களைச் சேர்ந்த பழங்குடி ஆதிவாசிகள், சஜித் பிரேமதாஸவுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட திஸ்ஸ அத்தநாயக்க, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து தற்போதுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் எம்முடன் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அதேவேளை சிவில் சமூக அமைப்புக்களும் எமக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றன.

எனவே குறித்தவொரு குழுவினருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் பல்வேறு தரப்பினரையும் எம்மோடு இணைத்து கொண்டு நாட்டை முன்நோக்கிப் பயணிக்கச் செய்வதே எம் ஒரே நோக்கமாக இருக்கின்றது.

ஆனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவைப் பொறுத்தவரை எவ்வாறேனும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்பதை மாத்திரமே இலக்காகக் கொண்டிருக்கிறார்.

எனினும் சஜித் சாதாரண வறிய மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து, அந்த சமூகத்தினருக்கு அவசியமான உதவிகளை வழங்கி, சுபீட்சமானதொரு இலங்கையை உருவாக்க முயற்சிக்கின்றார் – என்றார். (ஐ)

# மாதிரி வாக்குப்பெட்டிகள் அறிமுகம்



கொழும்பு, நவ. 01
2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான மூன்று அளவிலான மாதிரி வாக்குப்பெட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வாக்குப்பெட்டிகளை நேற்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிமுகப்படுத்தினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. அத்தோடு ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவு நவம்பர் 18ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2019 இல் வெளியிடப்பெற்றது.